# சிவகாமி தமிழ் வாசகம்

## மூன்றாம் புத்தகம்

ஆசிரியர் :
வித்துவான் : இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா
தமிழாசிரியர், கிறிஸ்தவக் கலாசாலை, சென்னை

சிவகாமி பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீவைகுண்டம் :: திருநெல்வேலி ஜில்லா
பிராஞ்சு :—சேலம் & திருநெல்வேலி ஜங்ஷன்

காபிரைட்] 1952 [விலை அணா 7

முதற் பதிப்பு—1949
ஐந்தாம் பதிப்பு—1952

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
*Vide Page* 29, *Fort St. George Gazette, Part I*
*dated* 22-5-1951

**Kabeer Printing Works, Madras (2004)**

# முன்னுரை

சிவகாமி தமிழ் வாசக வரிசையில் இது மூன்ருவது புத்தகம். முதல் இரண்டு புத்தகங்களைத் தழுவி முறைப்படி பாடதிட்டத்திற்குப் பொருந்த, பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சொற்பயிற்சி, மொழியில் பற்று, மொழியில் நடை, கருத்துக்களை எளிய முறையில் வெளிப்படுத்தும் முறை என்னும் இவை பாடங்கள் படிக்கும் மாணவர்கள் உள்ளத்தில் பதியுமாறு அமைந்து செல்லுதல் காணலாம். ஒவ்வொரு பாடமும் எவ்வகையிலேனும் நல்லதோர் கருத்தைப் படிக்கும் மாணவன் கருத்தில் பதியச் செய்யும் வகையில் அமைந்திருத்தல் காணலாம். சிறிது நீண்ட பல சொற்ருெடர்களைக் கொண்ட வாக்கியம் இவ்வகுப்பிலிருந்தே அமைக்கப் பழகுதல் வேண்டுமன்ருே ? பல்வேறு வகை வாக்கியங்கள் அமையப் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. படிக்கும் மாணவன் நா தடையுருது சொற்களை விரும்பி உச்சரிக்கவும், காதிற்கு இனிய ஓசை தோன்றவும், மற்றும் படிக்கவேண்டும் என்னும் ஊக்கம் பிறக்குமாறும் சிந்தித்துப் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாடங்களுக்கு ஏற்றவாறும் மாணவர்கள் உள்ளத்தில் கிளர்ச்சியும், ஊக்கமும், சிந்தனையும் பிறக்குமாறும் செய்ய வல்ல சித்திரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் அரும்பதங்கள் தரப்பட்டுள்ளன. அவை உச்சரித்துப் பழகவும், பிழையின்றிப் பாராமல் எழுதப் பழகவும், சொற்களும் பொருளும் மேன்மேலும் உணரவும் பயன் தரும். சிறுவிடை வினக்கள் என்பது வகுப்பறையில் கேள்வி கேட்டு வாய்மொழியாக விடைபெறவும் எழுதச் செய்யவும் திருப்பு முறையாக முதல்நாள் பாடத்தை மறுநாள் கேட்டுணரவும் உபயோகமாகும். கட்டுரைப் பயிற்சி என்பதற்கான புதுமுறை வகுப்புக்கு ஏற்றவாறு சிறுவர்கள் தாமாகக் கொடுக்கும் விஷயத்தைப் பற்றிச் சிறிய எளிய வாக்கியங்கள் சிலவற்ருல் தம் கருத்தினை வெளிப்படுத்தும் ஆற்றலை உண்டாக்க

வும், அவ்வாற்றல் வழி நின்று பயிலவும் உணர்ச்சியளிக்கும் வகையில் அமைக்கலாகும். பின்னும் பயிற்சிகள் மாணவர்களின் பல்வேறு திறனை வெளிப்படுத்த அமைந்துள்ளன. சில திருப்பு முறையாக அமைந்து ஞாபக சக்தியை அளிக்கும். சில சிந்திக்கும் திறனை அளிக்கும். மற்றும் வகுப்பிற்கு ஏற்றவளவு இலக்கணமும் எளிய முறையில் அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிகளைப் பள்ளிக்கூடத்திலும், வீட்டிலும் மாணவர்கள் செய்து பழகலாம்.

எனவே, இவ்வாசக வரிசையில் இப்புத்தகம் முதலாக மாணவன் மொழி வளர்ச்சிக்குரிய ஆக்கங்கள் தேடப்பட்டுள்ளன. மூன்று, நான்கு, ஐந்து புத்தகங்களைப் படித்த அளவில் மாணவன் ஏறத் தாழத் தவறின்றி வாக்கியங்களை எழுதவும், மொழியைத் திருத்தமாகப் பேசவும், பின்னும் படிப்பில் விருப்பம் மிக்கவனாய்த் தூண்டப்பெற்றுத் துலங்கவும் பொருந்திய நிலையில் எழுதப்பட்டுள்ளன. இப்புத்தகமும் இதனைத் தொடர்ந்து வருவனவும் பல்லாற்றானும் வருங்காலத் தமிழ் மாணவர்களுக்குப் பொருள் வளம், சொல் வளம், மொழியூற்றம் முதலானவற்றில் அடிப்படைக் கல்வித் (Basic Education) திட்டத்திற்குப் பொருந்த அமைந்து பெரும் பயன் அளிக்கும் என நம்புகிறேன்.


**இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா**

# பொருளடக்கம்


| எண் | பாடம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஔவையார் | ... | 1 |
| 2. | நெல் | ... | 5 |
| 3. | தங்கத் தட்டு | ... | 10 |
| 4. | பண்டிகைகள் | ... | 14 |
| 5. | சிறுவர் ஒழுக்கம் | ... | 19 |
| 6. | தேசிங்கு | ... | 21 |
| 7. | மூங்கில் | ... | 27 |
| 8. | கைத்தொழில் | ... | 31 |
| 9. | திருக்குற்றாலம் | ... | 33 |
| 10. | ஸபாஸ்டியன் | ... | 37 |
| 11. | இரும்பு | ... | 41 |
| 12. | இயேசு கிறிஸ்து | ... | 45 |
| 13. | தஞ்சைப் பெரிய கோவில் | ... | 49 |
| 14. | தெய்வம் | ... | 54 |
| 15. | யானை | ... | 57 |
| 16. | அறிவின் திறமை | ... | 61 |
| 17. | சுத்தம் | ... | 66 |
| 18. | குமணன் | ... | 73 |
| 19. | கடிகாரம் | ... | 80 |
| 20. | உரையாடல் | ... | 82 |
| 21. | கிளிக் கண்ணிகள் | ... | 85 |
| 22. | மனிதருள் மாணிக்கம் | ... | 87 |
| 23. | குகனும் பரதனும் | ... | 91 |
| | செய்யுட் பகுதி | | |
| | ஆத்திசூடி | ... | 96 |
| | கொன்றை வேந்தன் | ... | 97 |
| | வெற்றி வேற்கை | ... | 98 |

# சிவகாமி தமிழ் வாசகம்

## மூன்றாம் புத்தகம்



## 1. ஔவையார்

பிள்ளைகளே, முன் வகுப்பில் ஆத்திசூடி படித்தீர்கள் அல்லவா? ஆத்திசூடியை இயற்றியவர் ஔவையார். ஔவையார் சிறுவர்களுக்காகச் சில நூல்கள் இயற்றியுள்ளார். ஆனால், அவை பெரியவர்களாலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன. இளமையில் படிக்கும் ஔவையார் பாடல்களைப் பெரியோர்கள் ஆன பின்னும் மறக்க மாட்டீர்கள். பெரியோர்கள் பேசும்பொழுது ஔவையார் பாடல்களைக் கூறுவது வழக்கம். 'இளமையில் கல்' என்று ஔவையாரே கூறியுள்ளார்.

ஔவை என்றால் கிழவி என்று அர்த்தம். அவர் வயதானவர்; அவர் நிறைந்த கல்வி உடையவர். நிறைந்த கல்வி இருந்தும் அவரிடத்தில் கர்வம் இல்லை. ஔவையாரை அரசர்களும் செல்வர்களும் ஆதரித்தார்கள். ஔவையாருக்கு ஏழை என்றும் பணக்காரர் என்றும் வித்தியாசம் கிடையாது.

ஔவையார் எங்கும் நடந்து செல்வார். ஒரு சமயம் அவர் ஓர் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது வெயில் அதிகமாய்க் காய்ந்தது. ஔவையாருக்குத் தாகம் உண்டாயிற்று. அவர் மிகவும் களைத்திருந்தார்.





வழியில் ஒரு நாவல் மரம் இருந்தது. அம் மரத்தின்மேல் ஒரு பையன் இருந்தான். கீழே இரண்டு பையன்கள் இருந்தார்கள். சிறிது தூரத்தில் மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. மேலே இருந்த பையன் மரக்கிளைகளை உலுக்கினான். கீழே இருந்த பையன்கள் பழங்களைப் பொறுக்கித் தின்றார்கள். அவ்விடத்திற்கு ஔவையார் வந்தார். அவர் சில

நாவற்பழங்களைத் தின்று தாகத்தைத் தீர்த்துக் கொள்ள எண்ணினார்.

ஔவையார் மேலே உள்ள பையனைப் பார்த்துத் தமக்கும் சில பழங்களைப் போடும்படி கேட்டார். அதற்கு அவன், "பாட்டி, சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவையாருக்கு அவன் கேள்வி விளங்கவில்லை. "சுடாத பழம் போடு" என்றார் ஔவையார். பையன் மரக் கிளையைப் பலமாக உலுக்கினான். பல காய்களும் பழங்களும் உதிர்ந்தன.

மணலின் மேல் விழுந்த பழங்களை ஔவையார் பொறுக்கினார். பழங்கள் நன்கு கனிந்திருந்ததால் ஔவையார் வாயால் ஊதி, மணலைப் போக்கித் தின்னலானார். அப்பொழுது சிறுவன், "பாட்டி, பழம் சுடப்போகிறது. நன்றாய் ஊதித் தின்னுங்கள்" என்றான். அப்பொழுதுதான் சுட்ட பழம் என்பது கனிந்த பழம் என்றும், சுடாத பழம் என்பது செங்காய் என்றும் ஔவையாருக்குத் தெரிந்தது. ஔவையார் சிறுவனது புத்தி கூர்மையை வியந்தார். அவர் சில பழங்களைத் தின்று தாகம் தணிந்தார். பின், அவர் தம் வழியே சென்றார்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| இயற்றியவர் | ஆதரித்தார்கள் | உலுக்கினான் |
| விரும்பி | கர்வம் | கனிந்த |
| பாடல்கள் | வித்தியாசம் | செங்காய் |
| பதிந்து | சமயம் | வியந்தார் |
| வழக்கம் | தாகம் | தணிந்தார் |
| மேய்ந்துகொண்டிருந்தது | பொறுக்கினார் | ஊதி |

## சிறுவிடை வினுக்கள்

1. ஔவையார் யார்?
2. அவர் சிறுவர்களுக்காகச் செய்துள்ளது என்ன?
3. அவர் பாடலின் தன்மை யாது?
4. அவரிடம் காணப்பட்ட சிறப்பு யாது?
5. அவருக்குக் களைப்புண்டாகக் காரணம் என்ன?
6. அவர் பையன்களை எங்கு கண்டார்?
7. அவர்கள் யாது செய்து கொண்டிருந்தனர்?
8. ஔவையார் யாது எண்ணினர்?
9. ஔவையார் பையனை யாது கேட்டார்?
10. "பாட்டி, பழம் சுடப்போகிறது. ஊதித் தின்னுங்கள்" —சந்தர்ப்பம் தருக.

## பயிற்சி—1

கோட்டில் ஏற்ற சொற்களை அமைத்து எழுது :—

1. பெரியோர்கள்——ஔவையார்——க் கூறுவது வழக்கம்.
2. மேலே இருந்த— —க் கிளையை——கீழே இருந்த——பழங்களைப்——தின்றனர்கள்.
3. மணல் மேல்———பழங்களை ——பொறுக்கினர்.

## பயிற்சி—2

1. இதிலுள்ள கதையைச் சொல்லு.
2. இப்பாடத்தினல் அறியும் நீதி யாது?
3. விரும்பி, வழக்கம், கர்வம், சமயம், வியந்தார்—இச்சொற்களை அமைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

## 2. நெல்

நாம் தினந்தோறும் உணவு உண்கிறோம். உணவு இல்லாமல் நாம் வாழ முடியாது. நம் உணவிற்கு முக்கியமானது அரிசி. நெல்லிலிருந்து அரிசி கிடைக்கிறது. ஆதலால், நெல்லை நம் நாட்டில் எங்கும் விளைவிக்கிறார்கள். நெல் வயலில் விளைகிறது. நெல் விளையும் நிலத்தை நன்செய் நிலம் என்கிறோம்.




உழவன் நெல் விளைவிக்க முதலில் நாற்றங்காலைப் பண்படுத்துகிறான். அவன் விதை நெல்லை முதலில் நீரில் ஊறவைக்கிறான். ஊறிய பிறகு நீரை வடித்துவிட்டு நெல் முளை கிளம்பும்படி வைக்கோலால் சுற்றி வைக்கிறான். முளை கிளம்பும் காலத்தில் அதனை நாற்றங்காலில் விதைக்கிறான். நெல்முளை

சேற்றில் ஊன்றுகின்றது. சில நாட்களில் நாற்றங்கால் பசும் பட்டுப்போர்த்தாற்போல் காணப்படும். உழவன் நாற்று கெடாதபடி சிறிதளவு தண்ணீர் வைத்து அதிகமான நீரை வடித்துவிடுகிறான். சுமார் நாற்பது நாட்களில் நாற்று வளர்ந்து விடுகிறது.

உழவன் நாற்று நடுவதற்குத் தகுந்த வயலை உழுது, மேடு பள்ளம் இல்லாமல் சமப்படுத்துவான். இதற்குப் பரம்படித்தல் என்று பெயர். உழவன் நாற்று நடும் வயலை நான்கு ஐந்து முறை ஆழமாக உழுவான். பின் தழைகளைப் போட்டு அவை சேற்றில் அமிழும்படி மிதிப்பான். பின்னர் நாற்றங்காலில் விளைந்த நாற்றுக்களை உழவன் நடுவான்.

நாற்றுக்கள் சில நாட்களில் வேரூன்றிவிடும். உழவன் அளவோடு நீர் பாய்ச்சுவான். நெற் பயிர் சுமார் நான்கு அல்லது ஐந்து அடி உயரம் வளரும். நெற் பயிருக்கு உஷ்ணமும் மழையும் தேவை. நெற் பயிர் நன்கு வளர்ந்து கதிர் தள்ளும். அக்காலத்தில் உழவன் கருத்தோடு நீர் பாய்ச்சி, காத்து வருவான். நெல் முற்றியதும் பாரம் தாங்காமல் கதிர் சாயும். நெற் கதிர் முற்றிப் பக்குவமானவுடன் உழவன் அதனைத் தாளோடு அறுத்துக் கட்டுவான். கட்டு களைக் களத்திற்குக் கொண்டு வருவான்.

பின் உழவன் தாள்களைப் பிடித்துத் தலையடி அடிப்பான். நெல்மணிகள் உதிர்ந்துவிடும். தலை யடியில் உதிராத நெல்மணிகளை மாடுகளைக் கொண்டு போரடித்துப் பிரிப்பான். நெல்லினது உலர்ந்த தண்டு வைக்கோல் எனப்படும். அதனைப் போராகப் போடுவான். பின் நெல்லைத் தூற்றுவான். அரிசி உள் இல்லாத நெல் பதர் எனப்படும். பதர் கனம் இல்லாதது. ஆதலால், காற்றால் அடிக்கப்பட்டுத்

தூரத்தில் விழும். நெல் தனியாகக் குவியும். நெல்லைக் கோணிப் பைகளில் போட்டுத் தைத்து வீட்டிற்குக் கொண்டு செல்வான்.

'உழுவார் உலகத்துக்கு ஆணி' என்பர். ஏன்? உழுவன் உழாவிட்டால் நமக்கு உணவு ஏது? அதனால் அல்லவா ஒளவையார், 'நெற்பயிர் விளை; பருவத்தே பயிர் செய்' என்று கூறியுள்ளார். 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை' என்று கூறுகிறார். 'பூமி திருத்தி உண்' என்பதும் அவர் கூறியது 'மேழிச் செல்வம் கோழைபடாது' என்பதும், 'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது' என்பதும் நாம் அறியத் தக்கவை. 'நிலத்துக்கு அணி நெல்லும் கரும்பும்' என்பர் பெரியோர். 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்பது ஒளவையாரின் பொன்மொழியாகும்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| உண்கிறோம் | பண்படுத்து | சமப்படுத்து |
| முக்கியமானது | நாற்றங்கால் | அமிழும்படி |
| நன்செய் | வைக்கோல் போர் | போர்த்தாற்போல் |
| புன்செய் | பதர் | தூற்றுவான் |

### சிறுவிடை வினாக்கள்

1. நாற்று விடுதலை விளக்கி எழுது.
2. பரம்படித்தல் என்றால் என்ன?
3. உழவுத் தொழிலைப் பற்றி, பெரியோர் கூறியுள்ள மொழிகள் எவை?

### பயிற்சி–1

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுது:—

1. நம் — முக்கியமானது — .
2. உழவன் — நெல் — முதலில் —ப் பண்படுத்துகிறான்.
3. சில நாட்களில் — பசும்பட்டுப் — காணப்படும்.

## பயிற்சி–2

நாற்றுக்கள் சில நாட்களில் வேரூன்றிவிடும்.

இந்த வாக்கியத்தைக் கவனி. கடைசியில் இருப்பது முற்றுப் புள்ளி. அது வாக்கியம் முடிந்ததைக் காட்டுகிறது. சொல்லவேண்டிய கருத்து முடிந்துவிட்டதைக் காட்டுகிறது.


## கதைப் பயிற்சி





அடியிலுள்ள சொற்களில் ஏற்றவற்றைக் கோடுள்ள இடத்தில் அமைத்து எழுது.

ஒரு காட்டில் நான்கு — மேய்ந்து கொண்டிருந்தன. அவை தம்முள் — இருந்தன. அவை ஒன்றை விட்டு ஒன்று — செல்வதில்லை. அவை — கொழுத்திருந்தன. அவற்றை ஒரு — பார்த்





தது. சிங்கம் அவற்றைத் தின்ன —. அது அவைகள் · செல்லும் சமயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஒரு சமயம் — மாடுகளுக்குள் — உண்டாயிற்று. அவை நான்கும் ஒன்றைவிட்டு — பிரிந்து சென்று — தொடங்கின. சிங்கம் அதனை உணர்ந்தது. சமயத்தைக் கைவிடக் கூடாது என்று அது — சிங்கம் ஒன்றிற்கு ஒன்று தெரியாதபடி — — தின்றது.

**நீதி:** 1. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.
2. ஒற்றுமை நீங்கினல் வருவது கேடு.

**சொற்கள்**

| | | |
|---|---|---|
| மாடுகள் | சிங்கம் | அந்த |
| ஒற்றுமையாய் | எண்ணியது | சச்சரவு |
| தின்று | சண்டையிட்டுச் | ஒன்று |
| நன்ருய்த் | பிரிந்து | நினைத்தது |
| ஒவ்வொன்ருய்த் | கொன்று | மேய |

# 3. தங்கத் தட்டு

இந்தியாவில் பல தலங்கள் இருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது காசி. காசிக்கு வாரணாசி என்ற பெயரும் உண்டு. காசி கங்கைக் கரையில் அமைந்துள்ளது. காசியில் விசுவநாதர் ஆலயம் இருக்கிறது. மக்கள் காசிக்குச் சென்று, கங்கையில் ஸ்நானம் செய்வார்கள்; விசுவநாதரைத் தரிசிப்பார்கள்.



ஒரு சமயம் விசுவநாதர் ஆலயத்தில் ஓர் அற்புதம் நடந்தது. தங்கத் தட்டு ஒன்று லிங்கத்தின் முன் காணப்பட்டது. அதில் ‘ யார் உண்மை அன்பரோ அவர் இதனை எடுத்துக் கொள்ளலாம் ’ என்று எழுதியிருந்தது. இச்செய்தி ஊரெங்கும் பரவியது. அந்தத் தெய்வத் தட்டைப் பெற எல்லோரும் விரும்பினர்.

கோயிலுக்கு மக்கள் பலர் சென்றனர். ஒவ்வொருவரும் அத்தங்கத் தட்டைப் பெற முயன்றனர். கையில் தங்கத்தட்டினை ஒருவர் எடுப்பார். அவர் உண்மை அன்பராக இல்லாமற் போனால் உடனே அது இரும்புத் தட்டாக மாறும். அதனை அவர் கீழே வைப்பார். அது மறுபடியும் தங்கத் தட்டாக மாறி விடும்.

ஒவ்வொருவருக்கும் அந்தத் தெய்வத் தட்டினைப் பெற ஆவல் இருந்தது. அதனால் செல்வமுடையவர்கள் பல தான தருமங்களைச் செய்யலாயினர். ஒவ்வொருவரும் அத் தட்டினைப் பெறப் போட்டி போட்டு அறத்தைச் செய்தார்கள். சில நாட்கள் கழிந்தன. மெய் அன்பன் காணப் படாமையால் தட்டு கோயிலிலேயே இருந்தது.

கோயிலுக்கு வரும் மக்கள் கூட்டமோ கணக்கில் அடங்கவில்லை. ஆனால், தங்கத் தட்டை எடுத்துக் கொள்ளக் கூடியவன் ஒருவனும் இல்லை. ஏழைகளும் நோயாளிகளும் கோயில் அருகில் நிறைந்திருந்தனர். அந்தத் தங்கத்தட்டினைப் பெற வரும் செல்வர்கள் ஏழை எளியவர்கட்குக் காசு கொடுத்தனர்.

ஒரு நாள் ஓர் எளியவன் கோயிலுக்கு வந்தான். அவன் வெகு தூரத்திலிருந்து காசிக்கு வந்தவன். அவன் எளிய ஆடை உடுத்தியிருந்தான். அவன் ஏழை எளியவர்களைக் கோயிலின் முன் கண்டதும் மிக வருந்தினான். “இவ்வளவு எளியவர்களை ஏன் படைத்தாய். இறைவனே!” என்று அவன் வருந்தினான். அவன் ஒரு நோயாளியைக் கண்டான். நோயாளியின் கைகால்கள் தொழுநோயால் அழுகி நீர் வடிந்து கொண்டிருந்தது; ஈக்கள் மொய்த்தன; நோயாளி மிக வருந்தினான். அவனைக் கவனிப்பாரே

இல்லை. புதிதாக வந்தவன் அந்நோயாளியண்டை சென்ருன். அவன் மனம் தீயில் இட்ட வெண்ணெய் போல் உருகிற்று. கோயிலுக்கு வருவோர் அந்த நோயாளனை அருவருப்போடு பார்த்தனர்; விலகிச் சென்றனர்.

புதிதாக வந்தவன் அப்பிணியாளன்மீது இரக்கங் கொண்டான். அவனுடைய புண்களைத் துடைத்துத் தன் மேலாடையைக் கொண்டு ஈக்கள் மொய்க்காதபடி கட்டினுன்; தன்னிடத்திலிருந்த உணவையும் கொடுத்தான். பின் அவன் நோயாளனுக்கு மருந்துகள் தேடிக் கொடுத்தான். சில நாட்கள் கழிந்தன. இவற்றைக் கோயில் குருக்கள் கண்டார். ஒரு நாள் குருக்கள் புதிதாக வந்தவனைக் கூப்பிட்டார். அவர் தட்டை எடுக்கும்படி அவனுக்குச் சொன்னுர். அவனும் தட்டை எடுத்தான். என்ன ஆச்சரியம்! அத்தட்டு முன்னிலும் அதிகமாக ஒளிவீசி விளங்கிற்று. குருக்கள் அத் தட்டினைப் பெறத் தக்கவன் அவனே என்று முடிவு செய்தார்.

புதிதாக வந்தவனுக்குத் தங்கத் தட்டு கிடைத்தது. அது தெய்வத் தட்டு அல்லவா? அவனுக்குச் செல்வம் மேன்மேலும் பெருகியது. கடவுள் பிறர்க்கு உதவத் தனக்குச் செல்வம் கொடுத்துள்ளார் என்பதை அவன் உணர்ந்தான். அவன் தன் செல்வத்தை ஏழை எளியவர்க்கு அளித்துக் காத்தான். அவனும் செல்வத்திஞல் சிறப்பாக வாழ்ந்தான்.

**அரும் பதங்கள்**

| | | |
|---|---|---|
| தலங்கள் | அற்புதம் | மெய் அன்பன் |
| முதன்மையானது | ஆவல் | நோயாளன் |
| தரிசிப்பார்கள் | தானதருமம் | தொழுநோய் |
| அருவருப்போடு | ஏழை எளியவர் | அருகில் |

## சிறுவிடை வினாக்கள்

1. காசி எங்கே இருக்கிறது? அதற்கு மறு பெயர் என்ன?
2. தங்கத் தட்டில் எழுதியிருந்தது என்ன?
3. தங்கத் தட்டின் தெய்வத் தன்மை எதனால் தெரிந்தது?
4. எளியவனுக்குத் தங்கத் தட்டு எதனால் கிடைத்தது?
5. இப்பாடத்தால் நீ அறிவன யாவை?

## பயிற்சி—1

தானதருமம், போட்டி போட்டு, ஏழை எளியவர், அருவருப்பு—இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

## பயிற்சி—2

காசி கங்கைக் கரையில் அமைந்துள்ளது. இதுபோல் எழுது :—

| | |
|---|---|
| சீரங்கம் | — — அமைந்துள்ளது. |
| சென்னை | — — அமைந்துள்ளது. |
| திருநெல்வேலி | — — அமைந்துள்ளது. |
| மதுரை | — — அமைந்துள்ளது. |

## பயிற்சி—3

தங்கம் + தட்டு = தங்கத் தட்டு. இதுபோல் சேர்த்து எழுது:—

தெய்வம் + தட்டு.
படம் + காட்சி.
திலம் + படம்.
மரம் + தூண்.

# 4. பண்டிகைகள்

நாம் ஒவ்வொரு வருடத்திலும் அநேக பண்டிகைகளைக் கொண்டாடுகிறோம். பண்டிகை நாட்கள் ஓய்வு நாட்கள். அந்நாட்களில் பலவகைப் பண்டங்களைச் சமைத்து உண்ணலாம். உற்றார் உறவினர்களோடு கூடி மகிழ்ந்திருக்கலாம்.

பண்டிகைகள் பல வகைப்படும். பிள்ளையார் சதுர்த்தி, சரஸ்வதி பூசை, தீபாவளி, சங்கராந்தி முதலியன இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள்.



தீபாவளிப் பண்டிகை ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல்நாள் வருகிறது. அன்று விடியற்காலையில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்கின்றோம்; புதிய ஆடைகளை உடுக்கிறோம்; இனிய

உண்டிகளை உண்கிறோம். அன்று சிறுவர்கள் மிகவும் மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள். ஏன் தெரியுமா? தீபாவளிப் பண்டிகை அன்று பட்டாஸ் வெடிப்பார்கள். பட்டாஸிற்குச் சீனவெடி என்ற பெயர் உண்டு. அப்பெயர் ஏன் வந்தது? பட்டாஸ் முன்பு சீனவிலிருந்து வந்தது. அதனால் அதனைச் சீனவெடி என்றார்கள். இக்காலத்தில் பட்டாஸ் நம் நாட்டிலேயே செய்யப்படுகிறது. தீபாவளி என்றால் தீப வரிசை என்று பொருள். அன்று எங்கும் பட்டாஸ் வெடியும், மத்தாப்பின் ஒளியும், வாணவகைகளின் பிரகாசமும் இருக்கும். சிறுவர்களுக்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும் அல்லவா?

பொங்கல் மிகவும் சிறந்த பண்டிகை. அது தை மாதம் முதல் தேதியில் வருவதாகும். அதற்கு முந்திய நாள் போகி என்றும், பிந்திய நாள் மாட்டுப் பொங்கல் என்றும் பெயர் பெறும். பொங்கற் பண்டிகை தமிழ் நாட்டினர்க்கு மிகவும் விசேஷமானது. அது குடியானவர்களுக்கு மிகவும் முக்கியமானது. உழவர்கள் அதனை விசேஷமாகக் கொண்டாடுவார்கள். ஏன் தெரியுமா?

வேளாண்மை என்பது பயிர்த் தொழில். பயிர்த் தொழிலுக்கு மிகவும் அவசியமானது மழை. மழைக்கு ஆதாரமாய் இருப்பது சூரியனின் வெப்பம். பயிர்த் தொழிலுக்கு உதவியாயிருப்பது மாடு.

சித்திரை, வைகாசி மாதங்களில் கதிரவன் வெப்பம் தாங்க முடியாது. குளம், குட்டை, ஏரி, ஆறு என்பவைகளில் நீர் வற்றி விடுகின்றது. கடல் நீரும் வற்றுகிறது. கதிரவன் வெப்பத்தால் நீர் ஆவியாக மாறி மேகமாகத் திரள்கின்றது. வெயில் குறையக் குறைய மழைக் காலம் தொடங்குகிறது. ஆடி

ஆவணி மாதங்களில் உழவன் பயிர்த்தொழிலைத் தொடங்குகிறான். அவனுக்கு மழை புரட்டாசி முதல் கார்த்திகை முடிய வேண்டும். தை மாதத்தில் அறுவடை ஆகிவிடுகிறது. பின் பனிக்காலம் தொடங்குகிறது.

மழைக்குத் தேவனான இந்திரனை வணங்குகிறான் உழவன்; விழாக் கொண்டாடுகிறான். அதுவே இந்திர விழா அல்லது போகிப்பண்டிகை. அன்று வீட்டைச் சுத்தம் செய்து வெள்ளையடித்துத் தூய்மை செய்து வைக்கிறான். பழையனவற்றைக் கழிக்கிறான்; எரிக்கிறான். மறுநாள் மழைக்குக் காரணமான சூரியனை வணங்குகின்றான்; அன்று புது நெல்லிலிருந்து அரிசி குத்திப் புதுப் பானையில் பொங்கல் செய்கிறான். இஞ்சி, மஞ்சள், கரும்பு, வாழை, துவரை, மொச்சை முதலியவை அவன் வீட்டில் நிரம்பி அவனுக்கு மகிழ்ச்சியளிக்கின்றன.

அன்று உழவன் புது ஆடைகளை உடுத்தி மகிழ்கிறான். நெற்குவியல் அவன் வீட்டில் நிறைந்து அவன் கண்களுக்கு இன்பம் அளிக்கின்றது. அவன் மனம் மகிழ்ச்சியால் பொங்குவதுபோல் வீட்டில் பால் பொங்குகிறது. அன்று உண்பது இன்பம் தரும் சர்க்கரைப் பொங்கல் அல்லவா?

மறுநாள், தன் உழவுத் தொழிலுக்கு உதவியாயிருக்கும் மாட்டிற்குப் பொங்கல் இடுகிறான். இதற்கு மாட்டுப் பொங்கல் என்று பெயர். அன்று மாட்டைக் குளிப்பாட்டி, அலங்காரம் செய்கிறான். அதற்குப் பொங்கல், வாழைப் பழம் முதலியன அளிக்கிறான். அன்று மாலை மாட்டை ஓட்டிச் செல்வான். பொங்கல் மாடு வருகிறதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?

பொங்கல் பண்டிகைக்குச் சங்கராந்தி என்ற பெயரும் உண்டு. தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய உத்தராயணம் என்று பெயர். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய தக்ஷிணாயனம் என்று பெயர்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| உழைக்கிறார்கள் | பிரகாசம் | வேளாண்மை |
| பதார்த்தங்கள் | வாணவகை | திரள்கின்றன |
| சுற்றத்தார் | பொங்குவது | வெப்பம் |
| மகிழ்கிறான் | உண்டிகள் | தொடங்குகிறது |
| உற்றார் உறவினர்கள் | அளிக்கின்றது | தூய்மை |

### சிறுவிடை வினாக்கள்

1. பண்டிகைகள் ஏற்படுத்தியதின் காரணம் என்ன?
2. பண்டிகைகளில் சில வகைகளைக் கூறு.
3. தீபாவளிப் பண்டிகையைப் பற்றி எழுது.
4. தீபாவளிப் பண்டிகை சிறுவர்களுக்கு இன்பம் உண்டாக்குவதேன்?
5. பொங்கல் பண்டிகையைப் பற்றி எழுது.
6. பொங்கல் பண்டிகை உழவர்களுக்கு முதன்மையானது என்பது ஏன்?

### பயிற்சி

கோடிட்ட இடத்தில் ஏற்ற சொற்களை அமைத்து எழுதுக :—

1. பொங்கற் பண்டிகை —— மிகவும் முக்கியமானது.
2. உழவர்கள் — விசேஷமாகக் —.
3. சித்திரை வைகாசி —— வெப்பம் —— முடியாது.

## மௌன வாசிப்பு – பயிற்சி

ஒரு வழிப்போக்கன் நெடுந்தூரத்திலிருந்து வந்து கொண்டிருந்தான். வெயில் மிகவும் கடுமையாய்க் காய்ந்தது. வழிப்





போக்கனுக்குத் தாகம் உண்டாயிற்று. அவன் ஓரிடத்தில் சிறிது



நேரம் தங்க எண்ணினான். அவன் அருகிலிருந்த தென்னந் தோப்புக்குச் சென்றான். சிறிது படுத்து மேலே பார்த்தான். அழகிய இளநீர்க் குலைகளைக் கண்டான். அம் மரங்களின் மேல் குரங்குகள் சில தாவி விளையாடிக் கொண்டிருந்தன. அவனுக்கு இரண்டொரு இளநீரைக் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள ஆசையுண்டாயிற்று. பல கற்களை எடுத்துக் குரங்குகளின் மேல் அவன் எறிந்தான். அவை இளநீர்களைப் பறித்து எறிந்தன. அவன் இளநீரைக் குடித்துக் களைப் பாறித் தன் வழியே போனான்.

## 5. சிறுவர் ஒழுக்கம்

1. அன்பை வளர்க்க வேண்டும்—கிளியே
அறிவைப் பெருக்க வேண்டும் ;
உன்போற் பிறரை எண்ணி—நல்ல
உதவி புரிய வேண்டும்.

2. தெய்வ நினைப்பு வேண்டும்—கிளியே
தேச நினைப்பு வேண்டும் ;
மெய்ம்மை ஒழுக்கம் வேண்டும்—நெஞ்சில்
வீர உறுதி வேண்டும்.

3. அன்னை சொற் கேட்க வேண்டும்—தந்தை
ஆணைக்கு இணங்க வேண்டும் ;
தன்னை வணங்க வேண்டும்—பிறர்
தம்மை மதிக்க வேண்டும்.

4. ஆசிரியர்க்கு அடங்கிக்—கிளியே
அறிவை வளர்க்க வேண்டும் ;
தேசம் வாழும் தொழிலில்—மிக்க
திறமை ஓங்க வேண்டும்.

—சுவாமி சுத்தானந்த பாரதி

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| பெருக்க | மெய்ம்மை | உறுதி |
| இணங்க | வணங்க | திறமை |

### சிறுவிடை வினாக்கள்


1. நாம் என்னென்ன செய்ய வேண்டும் ?
2. இப்பாட்டில் நம் முன்னேற்றத்திற்குக் கூறும் வழிகள் யாவை ?

## மௌன வாசிப்பு—பயிற்சி

*கீழ் வருவதைப் படி : (15 நிமிஷம்). எழுது :—*

(1) ஒரு குல்லாய் வியாபாரி தன் மூட்டையுடன் அயலூருக்குச் சென்றான். அவன் தலையில் குல்லாய் அணிந்திருந்தான். வழியில் அவன் ஓர் ஆலமரத்தடியில் படுத்துத் தூங்கினான். அம்மரத்தில் பல குரங்குகள் இருந்தன. அவை கீழே இறங்கின. அவன் அருகில் வந்தன. அவன் பக்கத்தில் வைத்திருந்த மூட்டையை அவிழ்த்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குல்லாயை எடுத்து அணிந்தன ; மரத்தின்மேல் ஏறிச் சென்றன.





குல்லாய் வியாபாரி விழித்தெழுந்தான். குல்லாய்களைக் காணவில்லை. ஒவ்வொரு குரங்கின் தலையிலும் தன் குல்லாய்கள் இருப்பதைக் கண்டான். கோபம் பொங்கிற்று. அவன் தன் தலையில் அணிந்திருந்த குல்லாயைக் கழற்றிக் கீழே எறிந்தான். குரங்குகளும் தத்தம் குல்லாய்களைக் கீழே எறிந்தன. வியாபாரி குல்லாய்களைப் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டு தன் வழியே போனான்.

**(2) இதற்கு என்ன தலைப்பு அளிப்பீர்கள் ?**

---



# 6. தேசிங்கு

இருநூறு வருஷங்களுக்கு முன் செஞ்சி என்னும் இடத்தில் தரணி சிங்கு என்று ஓர் அரசன் இருந்தான். அவன் ராஜபுத்திர குலத்தில் பிறந்தவன் ; மிக்க வீரம் உடையவன்.

அக்காலத்தில் டில்லி நகரில் ஷா ஆலம் என்னும் அரசர் ஆண்டு வந்தார். அவரிடத்தில் ஒரு குதிரை இருந்தது. அது முரட்டுக் குதிரை. அதனை யாரும் அடக்க முடியவில்லை. அக்குதிரையை அடக்கி நடத்துபவருக்கு ஆயிரம் பொற்காசு பரிசு அளிப்பதாக ஷா ஆலம் அறிவித்திருந்தார். ஆனால், குதிரையை அடக்கத் தவறியவர்கள் பதினாறு வருஷங்கள் சிறையில் இருக்க வேண்டும் என்றும் ஷா ஆலம் அறிவித்திருந்தார்.

தரணி சிங்கு குதிரையை அடக்கி நடத்த டில்லிக்குச் சென்றார். ஆனால், தரணி சிங்குக்குக் குதி

ரையை அடக்கி நடத்த முடியவில்லே. அவர் சிறைப் பட்டார்.

தரணி சிங்கின் மனைவி ராமாபாய். தரணி சிங்கு டில்லிக்குச் சென்ற பொழுது ராமாபாய் கர்ப்ப வதியாய் இருந்தாள். அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையே ஜயசிங்கு. ஜயசிங்கு என்ற பெயரே தேசிங்கு என்று ஆயிற்று. தேசிங்கு செல்வமாக வளர்ந்து வந்தான். அவன் பெரியவ ளுகிப் படைக் கலங்களையும் பயின்ருன். அவனுக்கு உற்ற நண்பன் மாபூத்கான்.

தேசிங்குக்கு வயது பதிறுறு ஆயிற்று. அவன் தந்தையைப் பற்றி விசாரிக்கலாளுன். அதுவரை யாரும் சொல்லாதிருந்தனர். ஒரு நாள் அவன் தாயாரைக் கேட்டான். அன்று அவள் உண் மையைச் சொன்னுள். அவள் கண்களில் நீர்த்துளி களைக் கண்டான். அவ்வளவே! தேசிங்கு தந்தையை விடுவித்துவர டில்லிக்குச் சென்ருன்.

டில்லிக்குச் சென்ற தேசிங்கு ஷா ஆலத்தை நேரில் கண்டான். தான் குதிரையை அடக்குவதாகக் கூறினுன். ஷா ஆலம் சிறுவனின் துணிவைக் கண்டான். "சிறுவனே, உன்னுல் முடியாத காரி யம் அது. நீ சிறுவன். அநேகர் தவறிச் சிறையில் இருக்கிருர்கள். எதையும் ஆராய்ந்து செய்" என்று ஷா ஆலம் கூறினுன்.

தேசிங்கு அஞ்சவில்லை. குதிரையைக் கொண்டு வரும்படி கூறினுன். குதிரையும் கொண்டு வரப் பட்டது. தேசிங்கு குதிரை அருகிற் சென்று, அதனைத் தட்டிக் கொடுத்தான்; திடீரெனத் தாவி ஏறினுன்; கடிவாளக் கயிற்றை உறுதியாய்ப் பிடித் துக்கொண்டான்; குதிரையை ஓட்டினுன். குதிரை

தன்மேல் ஏறியவனைக் கீழே தள்ள எவ்வளவோ முயன்றது. தேசிங்கு குதிரையின் கழுத்தை இறுகப் பிடித்துக்கொண்டான். அக்குதிரை பலவாறு முயன்றும் ஒன்றும் பயன் படவில்லை. குதிரையும் ஓடிஓடிக் களைத்து ஓரிடத்தில் ஓய்ந்து நின்றது. தேசிங்கு வெற்றி பெற்றான். கண்டார் அனைவரும் மகிழ்ந்தனர்.

ஷா ஆலம் தேசிங்கைப் புகழ்ந்தான். அவன் தந்தையைச் சிறையினின்றும் விடுவித்தான். ஷா ஆலத்தின் படைத் தலைவன் தன் மகளைத் தேசிங்குக்கு மணம் செய்து கொடுத்தான். பிறகு பெருஞ் சிறப்போடு எல்லாரும் செஞ்சி வந்து சேர்ந்தனர். ராமாபாய் எவ்வளவு மகிழ்ந்தாள் என்று கூற முடியுமோ?

சில ஆண்டுகளுக்குப் பின் தரணி சிங்கு நோயால் இறந்தான். ராமாபாய் அக்கால வழக்கப் படி அவனை எரித்த தீயில் விழுந்து இறந்தாள். தேசிங்கு அரசனானான். அவன் நண்பன் மாமுத் கான் படைத் தலைவன் ஆனான். தேசிங்கு நீதியோடு செம்மையாக ஆட்சி புரிந்தான். அவன் புகழ் பரவிற்று.

அக்காலத்தில் ஆர்க்காடு என்ற பகுதியைச் சையதுல்லா என்ற நவாபு ஆண்டுகொண்டிருந்தான். அவனுக்குத் தேசிங்கின்மீது பகை உண்டாயிற்று. தேசிங்கு தனக்குக் கப்பம் கட்ட வேண்டும் என்று ஒரு தூதனை அனுப்பினான்.

நவாபு கப்பம் கட்டும்படி கேட்டது தேசிங்குக்குப் பிடிக்கவில்லை. அவன் கப்பம் கட்ட மறுத்தான். எனவே, போர் தொடங்குவதாயிற்று.

நவாபு சேனையைத் திரட்டிக் கொண்டு வந்தான். தேசிங்கும் சேனையைத் திரட்டினன்.

மாபூத்கான் படை வீரர்கள் நடுவே சிங்கம் போல் பாய்ந்தான் ; பல யானை, குதிரை, காலாட்களை வெட்டி வீழ்த்தினன். கடும்போர் நடந்தது. மாபூத்கான் வெற்றி பெற்றன். ஆனல், நவாபின் வீரன் ஒருவன் மறைந்திருந்து அவனை வஞ்சகமாகக் கொன்று விட்டான்.

இச்செய்தி தேசிங்குக்கு எட்டியது. உடனே கோபங்கொண்டு எழுந்தான் தேசிங்கு. தன் நண்பனைக் கொன்றவனைத் தேசிங்கு கொன்று பழிக்குப் பழி வாங்கினன். ஆனலும் நண்பனைப் பிரிந்த துக்கம் நீங்கவில்லை. நண்பன் இறந்தபின் தான் இருந்து பயனில்லை என்று தேசிங்கு எண்ணினன் ; வாழ்க்கையை வெறுத்தான். தன்னைத் தானே வெட்டிக்கொண்டு இறந்தான். தேசிங்கு இறக்கவே அவன் மனைவி தீ உண்டாக்கி அதில் விழுந்து இறந்தாள்.

நவாபு அச்செய்தி கேட்டு வருந்தினன். அவன் தன் குற்றத்தை உணர்ந்தான் ; நட்பின் சிறப்பை அறிந்தான். தேசிங்கு மனைவியின் பெயரால் இராணிப் பேட்டை என்னும் ஊரை உண்டாக்கினன் ; தேசிங்கின் புகழ் மங்காது இருக்கச் செய்தான்.

**அரும் பதங்கள்**

| | | |
|---|---|---|
| பழைமையான | ஆராய்ந்து | இறுக |
| பரிசு | உறுதியாய் | ஆட்சி |
| விசாரி | பழிக்குப்பழி | கப்பம் |
| விடுவித்துவர | அனைவரும் | வஞ்சகமாக |
| துணிவு | பெருஞ்சிறப்பு | மங்காது |

## சிறுவிடை வினாக்கள்

1. தரணி சிங்கு சிறைபடக் காரணம் என்ன ?

2. தேசிங்கு யார் ? அவன் தன் தந்தையை எவ்வாறு விடுவித்தான் ?

3. மாபூத்கான் யார் ?

4. ஆர்க்காட்டு நவாப் படையெடுக்கக் காரணம் என்ன ?

5. மாபூத்கான் எப்படி இறந்தான் ?

6. தேசிங்கு மாபூத்கானிடம் கொண்டிருந்த நட்பின் பெருமை எவ்வாறு விளங்குகிறது ?

7. இராணிப்பேட்டை—இந்நகர்க்கு இப்பெயர் வரக் காரணம் என்ன ?

## பயிற்சி

பொற்காசு, தவறியவர், வாழ்க்கை, உறுதி, ஆராய்ந்து, துணிவு, மங்காது, ஓய்ந்து, விசாரித்து, பரிசு—இவற்றை அமைத்துத் தனித் தனி வாக்கியங்கள் எழுது.

## மௌன வாசிப்பு—பயிற்சி

ஐந்து நிமிஷங்களில் படி ; சொல் :—





தெனாலிராமன் வீட்டிற்குத் திருடர்கள் வந்தார்கள். இரவு நேரம். திருடர்கள் எப்படி வீட்டிற்குள் நுழைவது எனப் பேசிக் கொண்டார்கள். திருடர்கள் கேட்கும்படியாகத் தெனாலிராமன் மனைவியிடம், " இன்று திருடர்கள் நம் வீட்டிற்கு வருகிறார்கள். நம் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பணம் என்பவற்றைப் பெட்டியில் வைத்துக் கிணற்றில் போட்டுவிடுவோம். நாளைக்கு எடுத்துக்கொள்வோம் " என்று கூறினான். ஒரு பெட்டியைக் கொண்டுவந்து கற்களை நிரப்பித் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு போய், திருடர் காதில் விழும்படியாகத் 'தொப்' என்று கிணற்றில் போட்டான். திருடரும் பார்த்தனர். அவன் போன பிறகு நீரை இறைத்துக் கிணற்றிலிருக்கும் பெட்டியை எடுத்துக் கொள்வதென அவர்கள் தீர்மானித்தனர். திருடர்கள் நீர் இறைத்தார்கள். தெனாலிராமன் அதுதான் சமயம் என்று தோட்டத்திற்கு நீர் பாய்ச்சினான். பொழுது விடியும் நேரம் ஆயிற்று. " நீர் இறைத்தது போதும். தோட்டம் முழுவதும் பாய்ந்துவிட்டது " என்றான் தெனாலிராமன். திருடர்கள் ஏமாந்து ஓடிப்போய் விட்டனர்.




## 7. மூங்கில்

மூங்கிலை நீங்கள் எல்லோரும் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? மூங்கில் மக்களுக்குப் பல வகைகளில் பயன்படுகிறது. மூங்கில் உஷ்ணமான நாடுகளில்தான் வளரும். இந்தியாவில் மூங்கில் அதிகம். மூங்கில் புதர் புதராக வளர்ந்திருத்தலை நீங்கள் பார்க்கலாம். சீனு, ஜப்பான், தென் அமெரிக்கா என்னும் நாடுகளிலும் மூங்கில் மிகுதியும் உண்டு. வீட்டின் புறக்கடையிலும், வயலோரங்களிலும், ஆற்றுப் படுகைகளிலும், மலைச் சரிவுகளிலும் மூங்கில் புதர்களைக் காணலாம்.

மூங்கில் எழுபது எண்பது அடி உயரம் வளரும். மூங்கில் புல் இனத்தைச் சேர்ந்தது. அது வண்டல் நிறைந்த வளமான இடத்தில் செழித்து வளரும். மூங்கிலுக்கு முள் உண்டு. அதன் இலை சொர சொரப்பாக இருக்கும். மூங்கிலினடியில் முளைகள் தோன்றும்.

கரும்பு, மூங்கில், நாணல் என்பன ஓரினமாகும். கரும்பு போல் மூங்கிலுக்கும் கணு உண்டு. பல கணுக்கள் மூங்கிலில் இருப்பதைப் பார்த்திருக்கிறீர் களா? கணுக்கள் இருத்தலினால் மூங்கிலுக்கு வரை என்ற பெயரும் உண்டு. கணுக்களிலிருந்து கிளைகள் தோன்றும். அவை சிறியனவாக இருக்கும்.



மூங்கிலில் இரண்டுவகை உண்டு. ஒன்று உள்ளே ஒன்றுமில்லாது துவாரமாயிருக்கும். மற் ருென்று உள்ளே கெட்டியாகத் துவாரம் இல்லாது இருக்கும். மூங்கில் அரிசி கோதுமையைப் போலிருக் கும். மூங்கில் முளை, கிழங்கு, அரிசி என்பவற்றை மக்கள் உணவுப் பொருள்களாக உபயோகிப்பதும் உண்டு. மூங்கிலுக்குச் சாம்பல் நல்ல எரு.

மூங்கில் பந்தல்போட உதவும். மூங்கிலை வீடு களுக்கு மேற் கூரை போடுவதற்கும் உபயோகப் படுத்துகிருேம். பருத்த மூங்கில்கள் தூண்களாகவும்

வாகனங்களைத் தூக்க, வாரைகளாகவும் பயன்படுகின்றன. படகுகள், பரிசில்கள், மேஜைகள், நாற்காலிகள் முதலியனவும் செய்யலாம். மூங்கில் பல்லக்கின் மேல் வளைவான கொம்பாக உபயோகப்படுகிறது. மூங்கிலைப் பிளந்து சிம்புகளாக்கி வண்டிக் கூடுகளுக்குப் பயன் படுத்துகின்றனர். பின்னும் மென்மையான மூங்கிற் சிம்புகளைக் கொண்டு தட்டி, கூடை, பாய், முறம், விசிறி முதலியன செய்யலாம். மூங்கிலினால் பெட்டி பேழைகளும் செய்கிறார்கள். கிழவர்கள் மூங்கில் தடியைப் பிடித்துக் கொண்டு நடப்பதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா ? வீடுகளில் ஈரத் துணியை உலர்த்த மூங்கில் கொடி கட்டுவது உண்டு அல்லவா ? சிறு வாய்க்கால், ஓடை என்பவற்றைக் கடக்க மூங்கிலினால் பாலம் அமைப்பதும் உண்டு.

மூங்கில் இலை மருந்துக்குப் பயன்படுகிறது. மூங்கிலின் கணுக்களிலிருந்து ஒரு வகைப் பால் எடுப்பார்கள். அது கண்ணோய்க்கு மருந்து ஆகும். மூங்கிலை உடைத்து, அரைத்துக் கூழாக்கிக் காகிதம் செய்கிறார்கள்.

மூங்கில் புதரினிடத்தில் பாம்பு இருக்கும் என்பர். மூங்கில் எளியவர் குடிசைகளுக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஜப்பானியர் மூங்கிலாலேயே வீடுகள் கட்டிக் கொண்டு வாழ்கின்றனர்.

பயிர்த் தொழிலாளருக்கு மூங்கில் பலவகையில் பயன்படுகிறது. மூங்கில் வேலி அமைக்கவும் பயன்படுகிறது. மூங்கில் பாய், கூடை, முறம், விசிறி, மேஜை, நாற்காலி, பெட்டி முதலியன செய்ய உபயோகமாக உள்ளதால் அது ஒரு கைத்தொழிலையும் வளர்க்கின்றது. முத்து விளையும் இடங்களில் மூங்கிலும் ஒன்று என்பர் முன்னோர்.

## அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| புதர் புதராக | வளமான | கணுக்கள் |
| ஆற்றுப் படுகை | செழித்து | பரிசில் |
| மலைச் சரிவு | முளைகள் | பெட்டி பேழை |
| வாரை | சிம்புகள் | வாகனம் |

## சிறுவிடை வினாக்கள்

1. மூங்கில் எங்கு வளரும் ?
2. மூங்கில் வளரும் நாடுகள் சில கூறு.
3. மூங்கிலின் உபயோகங்களை எழுது.
4. மூங்கில் எவ்வினத்தைச் சேர்ந்தது ?

## பயிற்சி

1. சொர சொரப்பு, புதர் புதராக—இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுது.

2. கம்பர் பெரிய புலவர். அவர் ஒரு சமயம் ஒரு கிராமத்தின் வழியாய்ச் சென்று கொண்டிருந்தார். பனிக்காலம்—அதிகாலையில் கம்பர் சென்றார். குடியானவர்கள் ஏற்றம் இறைத்துக் கொண் டிருந்தனர். ஒருவன் 'மூங்கிலிலை மேலே' என்றான். கம்பர் கேட்டார். அதற்கு மேல் எவ்வாறு முடிப்பது என்று ஆராய்ந்து பார்த்தார். அவருக்கு விளங்கவில்லை. சற்று நின்றார். அப் பொழுது மற்றவன் 'தூங்குபனி நீரே' என்றான். 'என்ன அழகு ! எப்படி அறிந்தான்' என்று கம்பர் வியந்தார். அவர் 'ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப் பாட்டு இல்லை' என்று கூறிச் சென்றார்.

இதை எதிர்ச் சொல் எழுது.

# 8. கைத்தொழில்

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்பது உனக்கே சரியாமோ?

2. உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ?

3. காட்டிலும் மேட்டிலும் களைப்போடு
கஷ்டப் படுவோர் உழைப்பின்றி
வீட்டினில் சாதம் வெந்திடுமோ?
வேறு எதும் உணவைத் தந்திடுமோ?

4. கைத்தொழில் தம்மைக் காத்திடுவோம்
கலகம் பற்பல தீர்த்திடுவோம்
பொய்த் தொழில் யாவும் குறைந்திடவே
பூமியில் நாமே சிறந்திடுவோம்.

—ஆஸ்தான வித்துவான், தேசியகவி
நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| கவலை | பற்பல | விருந்து |
| ஒத்துக்கொள் | கலை | களைப்பு |
| உழைப்பு | வெந்திடுமோ | பொய்த் தொழில் |
| கஷ்டம் | குறை | கலகம் |

### சிறுவிடை வினாக்கள்

1. எப்பொழுது ஒருவனுக்குக் கவலையில்லை?
2. எவை இன்றி உலகில் ஒன்றும் செல்லாது?
3. உழவுத் தொழிலால் உலகிற்கு உண்டாகும் நன்மைகள் எவை?

## இலக்கணம்

கந்தன், பலகை, ஓடுகிறது—இச்சொற்களைக் கவனியுங்கள். இவற்றிற்கு அர்த்தம் உண்டு அல்லவா? எழுத்துக்கள் தொடர்ந்து நின்று அர்த்தம் இருந்தால் சொல் எனப்படும்.

தீ எரிகிறது, பூ மிக அழகு, ஈ பறக்கிறது. இவைகளைப் படியுங்கள். தடித்த எழுத்தில் உள்ளவை அர்த்தத்தைக் கொடுக்கின்றன அல்லவா? ஆனால், எழுத்துக்கள் பல இல்லை. ஒரே எழுத்து நின்று பொருளைத் தந்தது. ஒரே எழுத்தாயினும் பொருள் தருவதனால் இவையும் சொல்.

பிள்ளைகளே, எழுத்துக்கள் தனித்தாவது தொடர்ந்தாவது நின்று பொருளைத் தந்தால் அதனைச் சொல் என்பர்.

குதிரை ஓடுகிறது. இந்த வாக்கியத்தில் இரண்டு சொற்கள் உள்ளன. ஒன்று 'குதிரை'; மற்றொன்று 'ஓடுகிறது'. 'குதிரை' என்பது ஒரு மிருகத்தின் பெயர். 'ஓடுகிறது' என்பது அது செய்யும் தொழில். எனவே, சொல் பெயரையும் தொழிலையும் குறிப்பன என இரண்டாகும். தொழிலை வினை என்றும் கூறலாம். பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல் என்றும், தொழிலைக் குறிப்பது வினைச் சொல் என்றும் கூறப்படும்.

மனிதர், விலங்குகள், பொருள்கள், இடங்கள், காலம், உறுப்புகள், குணம், நிறம், வடிவம் என்பவற்றைக் குறிக்கும் பெயர்களும், தொழில்களின் பெயர்களும் பெயர்ச் சொல் எனப்படும்.

| | |
|---|---|
| கந்தன் | — மனிதன் பெயர். |
| யானை | — மிருகத்தின் பெயர். |
| பலகை, படம் | — பொருள்களின் பெயர்கள். |
| சிதம்பரம், கோயில் | — இடத்தின் பெயர்கள். |
| காலை, சித்திரை | — காலத்தின் பெயர்கள். |
| வேர், கண் | — உறுப்பின் பெயர்கள். |
| அன்பு, வெண்மை, சதுரம் | — குணம், நிறம், வடிவம் குறிக்கும் பெயர்கள். |
| படித்தல், ஓட்டம் | — தொழிலின் பெயர்கள். |

மொழி, பதம், சொல், வார்த்தை என்ற நான்கும் ஒரே அர்த்தம் உடையன.

# 9. திருக்குற்ருலம்


நாம் வசிக்கும் தேசம் இந்தியா. இந்தியாவின் ஒரு பகுதி தமிழ் நாடு. தமிழ் மொழியைப் பேசும் மக்கள் வசிக்கும் நாடு தமிழ் நாடு. தமிழ் நாட்டிற்குத் தமிழகம் என்ற பெயரும் உண்டு. இந்தியாவில் அநேக அற்புதமான அழகிய இடங்கள் உள்ளன. அவ்விதமான இடங்கள் தமிழ் நாட்டிலுமுள்ளன.

மலைகள், ஆறுகள், ஓடைகள், அருவிகள், மரம் அடர்ந்த காடுகள், சோலைகள், பசுமை நிறைந்த புல்வெளிகள் இவைகள் எல்லாம் பார்ப்பதற்கு அழகானவை அல்லவா? பலவிதமான செடிகள் பலவிதமான இலைகளுடனும், பூக்களுடனும் இருப்பதைப் பாருங்கள். இலைகளில் எவ்வளவு வகைகள்! எவ்வளவு விதமான வடிவங்கள்! பூக்களில் எவ்வளவு வகை! எவ்வளவு நிற பேதங்கள்! என்ன மணம்! இவை எல்லாம் யார் உண்டாக்குகிருர்? கடவுள் அல்லவா? கடவுளின் படைப்புத் திறமையை எண்ணிப் பாருங்கள்.

கடவுளால் படைக்கப்பட்ட இவற்றிற்கு அழகு இயல்பாக உள்ளது. அதனுல் இதனை இயற்கை அழகு என்கிறோம். மனிதன் எவ்வளவோ அழகுள்ள பொருள்களைச் செய்கிருன். அது செயற்கை அழகு எனப்படும். ஆனுல், இயற்கை அழகே சிறந்தது.

திருக்குற்ருலம் தமிழ் நாட்டிலுள்ளது. அது ஓர் அழகிய ஊர். அது திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி என்னும் ஊருக்கு மூன்று மைல் தூரத்தில் உள்ளது. திருக்குற்ருலம் இயற்கை அழகு நிறைந்த

இடம். அங்கு ஒரு பெரிய கோயில் உள்ளது. அதற்குக் குற்ருலநாதர் கோயில் என்று பெயர். அது மிகப் பழமையான கோயில். அதனைப் பற்றிப் பெரியோர்கள் பலர் பாடியுள்ளார்கள்.



கோயிலுக்குப்பின் மலையுள்ளது. அதற்குத் திரிகூடமலை என்று பெயர். அது மூன்று முடிகளை உடையது. அதனுல் திரிகூடமலை என்று பெயர் வந்தது. திரிகூடமலை மேற்கு மலைத் தொடர்களில் ஒரு பகுதி. கோயிலுக்குப் பக்கத்தில் ஓர் அருவி உள்ளது. அதற்கு வடவருவி என்று பெயர். அந்த

அருவி இருநூறடி உயரத்திலிருந்து விழுகிறது. அது மலையினின்றும் வீழ்ந்து ஆறாக ஓடுகிறது. அதற்குச் சித்திரா நதி என்று பெயர். குற்றாலத்தின் அருகில் சண்பக அருவி, தேன் அருவி, ஐந்தருவி என்பன உள்ளன. வடவருவியில் மக்கள் ஸ்நானம் செய்வர். நீர்வீழ்ச்சியில் ஸ்நானம் செய்தால் இன்பமாக இருக்கும்; உடலுக்கு நலம் தரும்.

குற்றாலத்தைச் சுற்றி மலைகள், காடுகள், சோலைகள், பசும்புல் வெளிகள் என்பவற்றைக் காணலாம். பார்ப்பதற்கு மிக அழகாய் இருக்கும். பசும்புல் தரைமேல் பலநிற மலர்கள் பூத்து இரத்தினக் கம்பளம் போல் விளங்கும். திருக்குற்றாலம் ஆரோக்கியமான இடம். அங்கு வசிப்பதற்கு இன்பமாக இருக்கும். கமுகு, வாழை, மா, பலா, தென்னை முதலிய மரங்களும் அதிகம்.

சோலைகளில் மரங்கள் மலர்களையும், காய்களையும், பழங்களையும் தாங்கிக் கொண்டிருக்கும். குரங்குகள் மரத்துக்கு மரம் தாவித் திரியும். அங்கு மயில்களும் வேறு பலவகைப் பறவைகளும் காணப்படும்.

இவ்வளவு சிறப்பு அமைந்த குற்றாலத்தை நேரில் காண ஆசை உண்டாகிறது அல்லவா? சாரல் தொடங்கும் காலமான ஆனி, ஆடி மாதங்களே குற்றாலத்தில் வசிக்கவேண்டிய மாதங்கள்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| தமிழ் நாடு | பலவிதமான | விநோதம் |
| தமிழ் மொழி | இன்பம் | செயற்கை |
| தாய் மொழி | படைப்பு | நீர்வீழ்ச்சி |
| தமிழகம் | இயல்பாக | கம்பளம் |
| அருவிகள் | இயற்கை | ஆரோக்கியமான |
| புல்வெளி | தாவித் திரியும் | பாலம் |

## சிறுவிடை வினாக்கள்

1. தமிழகம் என்று எதற்குப் பெயர்?
2. குற்றாலநாதர் கோயில் எங்குள்ளது?
3. திரிகூடமலை என்று எதற்குப் பெயர்?
4. ஏன் அப்பெயர் வந்தது?
5. எதற்குச் சித்திரா நதி என்று பெயர்?
6. குற்றாலத்திலுள்ள அருவிகளை எழுது.
7. சோலைகளைப் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.
8. குற்றாலத்திற்கு எந்தக் காலத்தில் போகவேண்டும்?

| | |
|---|---|
| கூட்டங் கூட்டமாய்<br>மந்தை மந்தையாய்<br>சாரை சாரையாய்<br>வரிசை வரிசையாய்<br>அடுக்கு அடுக்காய்<br>படிப் படியாய்<br>கும்பல் கும்பலாய் | இவைகளைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது. |



## 10. ஸபாஸ்டியன்

இந்தியா ஒரு தேசம். இதைப்போல் இன்னும் பல தேசங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று ஸ்பெயின் தேசம்.

ஸ்பெயின் தேசத்தில் சித்திரக்காரர் ஒருவர் இருந் தார். அவரிடத்தில் பல மாணவர்கள் சித்திரம் எழுதக் கற்றுக் கொண்டார்கள். அந்தச் சித்திரக்கார ரிடத்தில் ஓர் அடிமைச் சிறுவன் வேலைசெய்து வந் தான். அந்தப் பையன் பெயர் ஸபாஸ்டியன்.

சித்திரக்காரரின் சித்திரச் சாலையில் அநேக படங்கள் எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தன. சில பூர்த்தியானவை; சில இன்னும் முற்றுப் பெறாதவை. ஒருநாள் சித்திரக்காரர் வருவதற்கு முன்னர் மாண வர்கள் வந்துவிட்டனர். அவர்கள் ஒவ்வொரு சித்தி ரத்தையும் பார்த்துக்கொண்டே வந்தனர். முடிவில்

அவர்கள் ஓரிடத்தில் நின்றனர். அங்கு ஓர் 'அரை குறைச் சித்திரம் தீட்டப்பட்டிருந்தது. அச்சித்திரம் முடியாதிருந்தாலும் மிக அழகாக இருந்தது. அதனால் மாணவர்கள் அதன் சிறப்புகளைக் கவனித்துக் கொண்டு நின்றனர். அச்சமயத்தில் ஆசிரியரும் வந்தார்.

ஆசிரியரும். சற்றுநேரம் அச்சித்திரத்தை உற்றுப் பார்த்தார். "மிக அழகாய் இருக்கிறது. இதனைத் தீட்டியவர் யாவர்?" என்று ஆசிரியர் கேட்டார். மாணவர் ஒருவரும் பதில் சொல்லவில்லை. "அஞ்ச வேண்டாம். இச்சித்திரம் முற்றுப் பெறு திருந்தாலும் மிக அழகாக இருக்கிறது. உண்மையைச் சொல்லுங்கள். இதனைத் தீட்டியவன் நல்ல புத்திசாலி. இதனைத் தீட்டியவன் சித்திர வேலையில் என்னைவிடக் கெட்டிக்காரன் ஆவான்" என்றார் ஆசிரியர். மாணவர் ஒருவரும் பதில் சொல்லவில்லை.

ஆசிரியர் ஸபாஸ்டியனைக் கூப்பிட்டு, "நேற்று இரவு இங்கு யாரேனும் வந்தது உண்டா?" என்று கேட்டார். "ஒருவரும் வரவில்லையே" என்று அடிமைச் சிறுவன் பதில் சொன்னான். "சரி, இன்று இரவு நீ ஜாக்கிரதையாக இங்கு காவல் இரு. யாரேனும் வந்தால் உடனே எனக்குத் தெரிவி" என்று ஆசிரியர் சொன்னார். பிறகு பாடம் நடந்தது; பாடம் முடிந்தபின் யாவரும் போயினர்.

இரவு வந்தது. சித்திரச் சாலையில் அடிமைச் சிறுவன் காவல் இருந்தான். அச் சித்திரத்தினிடம் சென்றான். அதனைக் கலைப்பதா? முடிப்பதா? என்று யோசித்தான். பொழுது விடிவதற்கு மூன்றுமணி நேரமே இருந்தது. சித்திரத்தை முடிப்பதென உறுதி கொண்டு சிறுவன் வேலையைத் தொடங்கினான்.

மெள்ள மெள்ள இருள் அகன்றது. பொழுது பொள்ளென விடிந்தது. சூரியன் உதயமும் ஆயிற்று. சித்திரமும் முடிந்தது. சிறுவன் பின்னும் சித்திரத்தை உற்று நோக்கிக்கொண்டே ஆங்காங்கு அழகு படுத்திக்கொண்டிருந்தான். பொழுது கழிந்தது தெரியவில்லை. ஆசிரியரும் மாணவரும் மெள்ள வந்து அவனைச் சூழ்ந்தனர். பையன் திரும்பிப் பார்த்தான். அவ்வளவே! உடல் வியர்த்தது; நடுநடுங்கிற்று.

சிறுவன் ஆசிரியர் காலில் வீழ்ந்து வணங்கி, "ஐயா, என்னை மன்னிக்க வேண்டும். நேற்றே உண்மை கூருது ஒழிந்தேன்" என்று வாய் குழற நின்று கூறினான்.

ஆசிரியர் அவனை அருகே அழைத்தார். அணைத்துக்கொண்டார். "சிறுவனே, உன் புத்தியின் திறத்தை நான் அறிந்தேன். உனக்கு இதனை யார் கற்றுக்கொடுத்தார்?" என்று ஆசிரியர் கேட்டார். சிறுவனுக்கு அச்சம் நீங்கவில்லை. அவன் உடல் நடுங்கிக்கொண்டே, "ஐயா, எனக்கு ஒருவரும் கற்றுக் கொடுக்கவில்லை. தாங்கள் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும்போது கவனமாய்க் கேட்டு நுட்பமாக அறிந்து கொண்டேன்" என்று பதில் கூறினான்.

ஆசிரியர் மனம் மிக மகிழ்ந்தது. அவன் வேண்டிக்கொண்டபடி அவன் தந்தையை அடிமைத்தனத்தினின்று விடுவித்தார். அவனையும் விடுவித்தார். ஸபாஸ்டியன் சித்திரத் தொழில் ஆசிரியரைக் காட்டிலும் கீர்த்திபெற்று விளங்கினான்.

## அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| அடிமை | பூர்த்தியான | முற்றுப் பெருத |
| தீட்டியவர் | உற்றுப்பார் | முடிவில் |
| நுட்பமாக | கலேத்துவிட | அச்சம் |
| வாயார | சூழ்ந்தனர் | கீர்த்தி |

## சிறுவிடை வினக்கள்

1. ஸபாஸ்டியன் யார்?

2. ஒரு நாள் மாணவர்கள் எதைப் பார்த்து வியந்து கொண்டிருந்தனர்?

3. இரவு சிறுவன் என்ன செய்தான்?


4. ஆசிரியரும், மாணவர்களும் எந்த நிலேயில் சிறுவனேக் கண்டனர்?

5. 'யார் கற்றுக் கொடுத்தார்'? என்று ஆசிரியர் கேள்விக்குச் சிறுவன் அளித்த பதில் யாது?

6. இவன் வரலாற்ருல் நீ அறிவது என்ன?

## பயிற்சி

மெள்ள, பொள்ளென, தைரியமாய், உதயம் — இவைகளே அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.



## 11. இரும்பு

[சுய சரிதை]

பிள்ளைகளே, நான் யார்? உங்களுக்குத் தெரியுமா? என் பெயர் இரும்பு. நான் மிகவும் முக்கியமானவன். ஆனால் என்னை மிகவும் அற்பமாக நினைத்து எடுத்து எறியும் இடமும் காலமும் உண்டு. என் வாழ்க்கை மிகவும் விசித்திரமானது.

என் நிறம் கருமை. எனக்கு ஒளி இல்லை. பிரகாசம் இல்லாத என்னை யார் விரும்புவார்கள் என்று நினைக்காதீர்கள். உழவன் முதல் அரசன் ஈறாக எல்லோருக்கும் நான் வேண்டியவனே. உழவனுக்கு வேண்டிய கொழு அரிவாள் முதல் அரசனுக்குரிய படைக் கலங்கள்வரை செய்ய உதவியாகிறேன்.

கொல்லன், கொத்தன், தட்டான், தச்சன் முதலான தொழிலாளர் என்னாலன்றோ தங்கள் ஆயுதங்களைச் செய்து கொள்கின்றனர்? என்னைத்

தகடுகளாகவும், கம்பிகளாகவும், உருளைகளாகவும், தண்டவாளங்களாகவும், இயந்திரங்களாகவும் செய்து கொள்கின்றனர்.

நான் கருநிறமுடைய எளியவன். ஆயினும் நான் இருக்கும் நாடுகளில் தொழிற்சாலை உண்டாக்கிச் செல்வமுள்ள நாடுகளாகச் செய்கிறேன். கைத்தொழில்களுக்கும் இயந்திரத் தொழில்களுக்கும் நான் அதிக உதவியாய் இருக்கிறேன். ஆணிகள், லாடங்கள், வண்டிப் பட்டைகள் முதல் ரயில் என்ஜின்கள், கப்பல்கள், மோட்டார்கள் வரை நான் எவ்வளவு பயன்படுகிறேன் என்று நினைத்துப் பாருங்கள். என் வடிவத்தைக் கண்டு இகழாதீர்கள். என் உபயோகத்தைக் கண்டேனும் என் மீது அன்பு வையுங்கள்.

நான் சுரங்கங்களிலும், மலைப்பக்கங்களிலும் வாழ்வேன். நான் மிகவும் கனம் உடையவன். என்னைவிடக் கனமானவன் என் இனத்தவன் ஒருவன் இருக்கிறான். அவன் யார் தெரியுமா? அவன்தான் 'பொன்' என்பவன். என்னையும் பிற நால்வரையும் சேர்த்து ஓரினத்தவர் என்பர். மற்றவர், பொன், வெள்ளி, ஈயம், செம்பு என்பவர் ஆவர். எங்களை ஐந்து உலோகங்கள் என்பர். நாங்கள் ஐவரும் பூமியிலிருந்தே எடுக்கப்படுகின்றோம். எங்கள் ஐவரிலும் உயர்ந்தவன் பொன் என்பவன். எனக்குக் கரும் பொன் என்ற பெயரும் உண்டு.

பூமியின் அடியில் நான் இருக்கும் பாகம் சுரங்கம் எனப்படும். அது என் வீடு. என் வீட்டைக் கனி என்று கூறுவதும் உண்டு. மலைச்சரிவில் என்னோடு மணல் கலந்திருக்கும். சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் என்னோடு மண் கலந்திருக்கும். மண்ணும்

மணலும் கலந்த நான் கட்டியாக இருப்பேன். அப்போது இரும்புச் சன்னங்கள் என்று என்னை அழைப்பார்கள்.

மக்கள் என்னைச் சும்மா விடுவதில்லை. இரும்புச் சன்னக் கட்டிகளாகக் கிடைக்கும் என்னை எடுக்கிறார்கள்; நீரில் நன்றாகக் கழுவுகிறார்கள்; பெரிய கட்டிகளாக நான் இருந்தால் பொடியாக்குகிறார்கள்; பின் உலையிலிட்டு உருக்குகிறார்கள். ஏன் இப்படி என்னைத் துன்பப்படுத்த வேண்டும்? நான் அவர்களுக்கு நன்மையே செய்வேன்.

என்னைக் காய்ச்சி உருக்கும் பொழுது நிலக்கரியையும் சுண்ணாம்பையும் சேர்க்கிறார்கள். அப்பொழுது என்னோடு சேர்ந்த மண்ணும் கல்லும் மேலே நிற்க, நான் கீழே தங்குவேன். அவற்றை அகற்றி என்னைப் பல வடிவங்களைக் கொண்ட அச்சுகளில் வார்ப்பார்கள். இப்பொழுது என்னோடு நிலக்கரி சேர்ந்திருக்கிறது; மற்றும் நான் வார்க்கப்பட்டவன். ஆதலால், என்னை வார்ப்பு இரும்பு என்பார்கள்.

என்னை மறுபடியும் காய்ச்சுவார்கள். என்னிடம் இருந்த நிலக்கரி நீங்கிவிடும். நான் சுத்தம் அடைகிறேன். சுத்தமான என்னை எஃகு என்றும், உருக்கு என்றும் அழைக்கிறார்கள். வார்ப்பு இரும்பாக இருந்த பொழுது நான் வளைவேன். நான் எஃகு இரும்பானவுடன் வளையமாட்டேன்; வளைந்தால் ஒடிந்து விடுவேன். எனக்குப் பெருமை அதிகமாயிற்று அல்லவா? கர்வமும் அதிகமாயிற்று. பெருமை மிகுந்த மக்கள் பணிவுடையவர்களாக இருப்பது உலகில் அருமை தானே! பெரிய கடப்பாரையை எடுத்துக் காய்ச்சி வளைத்துவிடலாம். சிறிய ஊசியை வளைக்க முடியாது.

வளைத்தால் ஒடியும். என் நிலையை இதிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்.

இரும்புச் சன்னங்களாக நான் இலகுவில் உருக மாட்டேன். என்னை உருக்க அதிக உஷ்ணம் வேண்டும். அதனால் நிலக்கரி அதிகமாக உபயோகப் படுகிறது. அதனால் நானும் நிலக்கரியும் நெருங்கிய நண்பர்கள் ஆனோம். நானும் நிலக்கரியும் சேர்ந்து அகப்படும் இடங்களில் மக்கள் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்துகிறார்கள்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| அரிவாள் | உலோகங்கள் | சன்னம் |
| உருக்கு | கனி | தொழிற்சாலை |
| தண்டவாளம் | இலகு | வரலாறு |
| சுரங்கம் | இயந்திரம் | ஆயுதம் |

### சிறுவிடை வினாக்கள்

1. இரும்புச் சாமான்கள் எவை?
2. இரும்பு எந்த எந்தத் தொழிலாளிகளுக்குத் தேவை? எவ்வாறு?
3. இரும்பு எங்கே கிடைக்கிறது?
4. இரும்பின் இனத்தைச் சேர்ந்தவை எவை?
5. கரும்பொன் என்று பெயர் வரக் காரணம் என்ன?

### பயிற்சி

1. இரும்பு என்பதைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.
2. பெருமை மிகுந்த —— பணிவுடையவர்களாக —— உலகில் ——. இதில் தக்க வார்த்தைகளையமைத்து நிரப்புக.



## 12. இயேசு கிறிஸ்து

பிள்ளைகளே, இது இயேசு கிறிஸ்து என்னும் பெரியாரின் படம். அவர் போதித்த மதம் கிறிஸ்தவம் எனப்படும். அம்மதத்தைத் தழுவியவர் கிறிஸ்தவர் எனப்படுவர்.

பாலஸ்தீனம் என்பது ஒரு நாடு. அந்த நாட்டில் பெத்லஹேம் என்ற நகர் ஒன்று உண்டு. அந்த நகருக்கு அருகில் நாஸரத் என்ற நகரும் உண்டு. நாஸரத் என்னும் நகரில் ஜோஸப் என்பார் ஒருவர் இருந்தார். அவருடைய மனைவியார் மேரி என்பவர் ஆவர். ஜோஸப்பும் மேரியும் நாஸரத்திலிருந்து புறப் பட்டுப் பெத்லஹேம் நகருக்குச் செல்வாராயினர். வழி

யில் மேரி அம்மையார் ஒரு மாட்டுக் கொட்டிலில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்ருர். அக்குழந்தையே இயேசு கிறிஸ்து என்பவர் ஆவர்.

கிறிஸ்து பிறந்தபொழுது அந்நாட்டில் பல அற்புதங்கள் நடந்தன. அக்குழந்தை தெய்வத் திருவருளால் பிறந்தது என யாவரும் நம்பினர்.

குழந்தை பிறந்ததையும் அப்பொழுது நடந்த அற்புதங்களையும் அந்நாட்டு அரசன் கேள்விப்பட்டான். அதனுல் அக்குழந்தையால் தனக்கு ஏதேனும் கேடு வருமோ என எண்ணினுன். அவனுக்கு மனதில் அச்சம் தோன்றிற்று. எனவே, அவ்வரசன் கிறிஸ்துவைக் கொல்லத் தீர்மானித்தான். அதற்காக அவன் பல சூழ்ச்சிகள் செய்தான். அரசன் செய்யும் சூழ்ச்சியை அறிந்த மேரி குழந்தையோடு வேறு தேசத்திற்குச் சென்ருள். அரசன் சிறிது காலத்திற்குள் இறந்துவிடக் குழந்தையுடன் மேரி சொந்த ஊருக்குத் திரும்பி வந்தாள்.

இயேசு இளமையிலேயே சிறந்த அறிவு வாய்க்கப் பெற்றவர். அவருடைய நற்குணங்களையும் சிறந்த அறிவையும் அறிந்த பெரியோர்கள் அவரைப் புகழ்ந்தனர். இயேசு கிறிஸ்து பல ஞானிகளோடு பழகினுர்; தம் ஆத்ம சக்தியைப் பெருக்கிக் கொண்டார். தமக்குத் தீமை செய்வார்க்கு நன்மையே செய்வாராஞர்: அத்தகையவர் அறியாமைக்கு வருந்தினுர்; வாழ்க்கையில் மக்கள் படும் துன்பங் கண்டு மனம் இரங்கினுர்.

இயேசு கிறிஸ்துவிடம் பல அரிய தன்மைகள் நிறைந்திருந்தன. அவரிடம் தெய்வத் தன்மை இருத்தலை யாவரும் அறிந்தனர். மக்கள் அவரைத் தமக்கு வாழ்க்கை நெறி காட்ட வந்தவராகவே எண்ணினர்.

மக்கள் தங்கள் குறைகளை இயேசு கிறிஸ்துவிடம் கூறிக்கொள்வர்; அவர் கூறும் நெறிப்படி ஒழுகி நலம் பெறுவர். இயேசு கிறிஸ்து பிறருக்கு நேரும் துன்பங்களைத் தமக்கு நேர்ந்தனவாக எண்ணி அவற்றை நீக்க முயல்வார்; நல்ல மார்க்கங்களை மக்களுக்குப் போதித்து வந்தார்.

இயேசு கிறிஸ்துவின் போதனைகள் அக்காலக் குருமார்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குப் பகைவராயினர். அவரைக் கொல்லவும் துணிந்தனர். அக்குருமார்கள் அந்நாட்டரசனைக் கொண்டே அவரைக் கொல்லச் சூழ்ச்சி செய்தனர். கிறிஸ்துவின் மீது பல குற்றங்களைச் சுமத்தினர். அரசன் குருமார்களின் பேச்சைக் கேட்டான்; கிறிஸ்துவைக் கொல்லுமாறு கட்டளையிட்டான்.

அதிகாரிகளில் சிலர், மன்னனுக்கு நன்மொழிகள் பல கூறினர். அரசன் ஒன்றையும் கேட்கவில்லை. 'கிறிஸ்துவைக் கொன்றே தீரவேண்டும் என்று பிடிவாதமாயிருந்தான்.

அரசனுக்கு விரோதமாகப் பெருங் குற்றங்களைச் செய்பவர்களைச் சிலுவையில் அறைவது அக்கால வழக்கம். அம்முறைப்படி கிறிஸ்துவும் சிலுவையில் அறையப்பட்டார். கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டுச் சொல்ல முடியாத துன்பத்தை அனுபவித்தார். அப்பொழுது அவர் மன்னனது அறியாமையைக் கண்டு வருந்தினர்; அவன் செய்த பெருங் குற்றத்தை மன்னிக்குமாறு கடவுளை வேண்டினர். என்ன சாந்தம்! என்ன அன்பு!

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து மூன்றும் நாள் உயிர் பெற்று எழுந்தார். அவர் தம்முடைய மாணுக்கர்களுக்குக் காட்சி அளித்து நல் உபதேசங்

கள் செய்து மறைந்தார். அவரைப் பின்பற்றி ஒழுகும் மதமே கிறிஸ்தவ மதம் எனப்படும். கிறிஸ்து தோன்றி மறைந்து இன்று 1951 ஆண்டுகள் ஆயின.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| போதித்த | மாட்டுக் கொட்டில் | ஆத்ம சக்தி |
| தழுவியவர் | சூழ்ச்சி | இரங்கினர் |
| அரிய | குருமார் | கட்டளை |
| பிடிவாதம் | விரோதமாய் | சிலுவை |
| அனுபவித்தார் | சாந்தம் | உபதேசங்கள் |


### சிறுவிடை வினாக்கள்

1. கிறிஸ்தவர் யாவர்?
2. கிறிஸ்து எங்கே பிறந்தார்?
3. கிறிஸ்துவைத் தெய்வத் திருவருளால் பிறந்தவர் என்று எதனால் நம்பினர்?
4. அந்நாட்டு அரசன் எத்தகையவன்? என்ன நினைத்தான்? அவன் செய்தது என்ன?
5. கிறிஸ்து எத்தன்மையானவர்?
6. மக்கள் கிறிஸ்துவினிடம் எவ்வாறு ஒழுகினர்?
7. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து யாரைக் குறித்து வருந்தினர்?

### பயிற்சி

1. அரிய, பிடிவாதம், தீர்மானித்தான், சொந்தம், கட்டளை, உபதேசங்கள்—இவற்றை வாக்கியத்தில் அமைத்துக் காட்டு.

2. அரசன் —— ஏதேனும் —— வருமோ —— எண்ணினான். கோடிட்ட இடங்களை நிரப்பு.



## 13. தஞ்சைப் பெரிய கோயில்

தமிழ் நாடு எங்கும் சிவாலயம் அதிகம் என்று பெரியோர் கூறுவார்கள். ஆலயம் என்றால் கோயில். சிவாலயம் என்றால் சிவன் கோயில். தமிழ் நாட்டில் பல பெரிய கோயில்கள் இருக்கின்றன. அவற்றில் சிறந்தது தஞ்சாவூரில் உள்ள பெரிய கோயில்.

சோழ நாட்டை ஆண்டவர்கள் சோழர்கள். சோழ அரசர்களுள் மிகச் சிறந்தவன் இராஜ ராஜ சோழன். அவன் தன் காலத்தில் சோழ நாட்டைப் பலப்படுத்தினான்; பல வகையாலும் நாட்டிற்கு நன்மை புரிந்தான்; சோழ நாடு விரிவு அடைந்தது.

இராஜ ராஜ சோழன் தஞ்சாவூரைத் தலை நகரமாகக் கொண்டான். அந் நகரைப் பல வகையிலும் அழகுபடுத்தினான். அவன் சேரன், பாண்டியன் என்னும் அரசர்களையும் வென்றான். அதனால் அவனுக்கு மும்முடிச் சோழன் என்ற பெயர் உண்டா

யிற்று. இராஜ ராஜ சோழன் சிறந்த சிவ பக்தன். அவன் தலைநகரில் பெரியதொரு கோயில் எடுக்க விரும்பினான். அவனுக்குச் சிவபாத சேகரன் என்ற சிறப்புப் பெயர் உண்டு.

அரசன் நினைத்தால் ஆகாதது உண்டோ? கல்லே கிடைக்காத சோழ நாட்டில் பெருங் கற்களாலேயே பெருங் கோயில் கட்டுவதென அவன் தீர்மானித்தான். அதற்கு ஆவன தயாரிக்கப்பட்டன. கோயில் வேலையும் தொடங்கிற்று. நாளடைவில் இராஜ ராஜனது வெற்றிக்கு அறிகுறியாக அக்கோயில் எழுந்து விளங்குவதாயிற்று.

அந்தக் கோயிலுக்குள் செல்ல, மூன்று பெரிய கோபுரங்களைக் கொண்ட வாயில்களைக் கடக்கவேண்டும். அவை கேரளாந்தகன் வாயில், இராஜ ராஜன் திருவாயில், திருவணுக்கன் திருவாயில் என்பன. அவற்றைத் தாண்டிச்சென்றால் கருங்கல்லும் செங்கல்லும் பரப்பிய பரந்த வெளியிடம். அந்த வெளியிடம் 500 அடி நீளமும், 250 அடி அகலமும் கொண்டது.

இந்த வெளியிடத்தின் நடுவில் ஒரு மண்டபம். அதன் நடுவில் ஒரே கல்லாலாகிய நந்தி. நந்தி என்பது மாடு. மாடு சிவனுக்கு வாகனம் அல்லவா? இதன் நீளம் பத்தொன்பதரை அடி; உயரம் பன்னிரண்டடி; அகலம் எட்டேகால் அடி. இந்தியாவில் உள்ள நந்திகளில் இது இரண்டாவது.

சுவாமி லிங்க வடிவம். இந்த லிங்கம் நருமதை என்னும் ஆற்றின் கரையிலிருந்த கருங் கல்லினின்றும் செதுக்கி வந்தனர் என்று கூறுவர். இந்த லிங்கத்திற்கு ஏணி வைத்துத்தான் அபிஷேகம் முதலியன செய்யவேண்டும். அவ்வளவு உயரமானது லிங்கம்.

சுவாமி இருக்கும் இடம் ஒரு விமானம் போன்ற வடிவம் உடையது. அதனுல் இதனை மாடக் கோயில் என்பர். சுவாமி இருக்கும் இடம் கர்ப்பக் கிரஹம் எனப்படும். அக்கர்ப்பக்கிரஹத்தின்மேல் பதின்மூன்று கோபுர மாடிகளைக் கொண்ட கோபுரம் மிகவும் உயர்ந்து காணப்படுகிறது. இக்கோபுரம் இருநூற்றுப் பதினுறு அடி உயரம் உள்ளது.

கோபுரத்தின் மேல் பதின்மூன்ருவது மாடியின் மேல் தளம் ஒரே கல்லால் ஆனது. அது இருபத்தைந் தரை அடிச் சதுரம் கொண்டது. அதனைப் பிரம ரந்திர தளம் என்பர். அக்கல்லின் எடை எண்பது 'டன்'. அதற்கு மேல் பாதிப் பந்து வடிவமான விமானம். அதற்கு மேல் தூபிக்குடம் இருக்கிறது. தூபிக்குடம் செம்பால் ஆனது.

அக்குடத்தைத் தங்கத் தகட்டால் மூடியிருக்கிருர்கள். அந்தத் தூபிக் குடம் மூவாயிரத்து எண்பத்து மூன்று பலம் எடையுள்ளது. அதனைப் பொன்னுல் மூட மூவாயிரம் கழஞ்சு பொன் செலவாயிற்று என்பர். மிகச் சிறந்த இந்த விமானத்தை உத்தம விமானம் என்றும், தக்ஷிண மேரு என்றும் கூறுவர்.

கோயில் வேலை நடக்கும்பொழுது சிற்பிகளுக்கு அழகி என்னும் கிழவி ஒருத்தி உணவு, தண்ணீர் என்பவற்றை அப்போது அப்போது கொடுத்து உதவினுள். அவள் தானும் அக்கோயிலுக்கு ஏதாவது ஒரு பொருளைக் கொடுக்க விரும்பினுள். அவள் விருப்பத்திற்குச் சிற்பிகள் இசைந்தனர். அவள் வீட்டில் ஒரு கல் இருந்தது. அதனை அவள் கொடுத்தாள். சிற்பிகள் அதனைச் செதுக்கி விமானத்தின் உச்சியில் வைத்தனர். அதன்மேல் தான் தூபிக்குடம்

வைக்கப்பட்டிருக்கிறது. பிரம ரந்திர தளம் என்பது அதுவே.

சிவன், ஒரு நாள் இராஜ ராஜன் கனவில் தோன்றி, "அம்மையார் நிழலில் நாம் இருக்கிறோம்" என்று கூறினர். இராஜ ராஜன் வியந்து உண்மையை விசாரித்து அறிந்தான். அவன் அக்கிழவியின் பெயரால் ஒரு குளமும் தோட்டமும் அமைத்துக் கொடுத்தான். அவை அழகி குளம், அழகித் தோட்டம் எனப்பட்டன.

தஞ்சாவூர்க் கோயிலைப் பெரிய கோயில் என்பர். இராஜ ராஜன் அக்கோயிலுக்குப் பொன்னும் நிலமும் அளித்தான். பூஜைகளும் திருவிழாக்களும் நடைபெற்று வந்தன. அக்கோயிலில் பல சிற்பங்களும் சித்திரங்களும் உள்ளன. அக் கோயிலைக் கருவூர்த் தேவர் என்ற பெரியார் பாடியுள்ளார். நீங்கள் தஞ்சாவூர்க்குச் சென்றால் பெரிய கோயிலைப் பார்க்கத் தவறாதீர்கள்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| சிவாலயம் | விரிவு | அபிஷேகம் |
| சாலவும் | அறிகுறி | தளம் |
| தெய்வ பக்தி | கர்ப்பக் கிரகம் | சிற்பி |
| விமானம் | உச்சி | கனவு |
| தூபிக்குடம் | வெற்றி | கழஞ்சு |

### சிறுவிடை வினாக்கள்

1. இராஜ ராஜனுக்குச் சிறப்புப் பெயர் யாது?
2. தஞ்சாவூர்க் கோயிலைப் பற்றி அறிந்தவற்றை எழுது.
3. நந்தியைப்பற்றி அறிவதென்ன?
4. தஞ்சாவூர்க் கோயில் கோபுரத்தைப் பற்றி எழுது.
5. அழகி யார்? அவளைப்பற்றி அறிவதென்ன?

## பயிற்சி-1

பெரிய கோயில்—சிறிய கோயில் இதுபோல் எழுது.

பெரிய விமானம்—

பெரிய கோபுரம்—

பெரிய தேர்—

## பயிற்சி-2

பழுகுவதற்கு + கோயில் — பழுகுவதற்குக் கோயில் - இதைப் போல் எழுது.

விஷயங்களை + கவனிக்கும்

ஊரார்களுக்கு + பாதுகாவலான

நாட்டை + பலப்படுத்தினன்

அந்நகரை + பலவகையிலும்

## 14. தெய்வம்

1. சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது யாராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவைஎன்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எதனாலே?
ஆர் இதற்கு எல்லாம் அதிகாரி?
அதை நாம் எண்ணிடவேண்டாமோ?

2. எத்தனை மிருகம்! எத்தனை மீன்!
எத்தனை ஊர்வன பறப்பன பார்!
எத்தனை பூச்சிகள்! புழு வகைகள்!
எண்ணத்தொலையாச்செடி கொடிகள்!
எத்தனை நிறங்கள்! உருவங்கள்
எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனையும் தர ஒரு கர்த்தன்
யாரோ எங்கோ இருப்பது மெய்.

3. அந்தப் பொருளை நாம் நினைத்து
அனைவரும்அன்பாய்க்குலவிடுவோம்
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம், அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

—ஆஸ்தான வித்துவான், தேசிய கவி
நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை.

## அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| திரிவது | ஊர்வன | தொழுதல் |
| காரிருள் | தொலையா | நிந்தை |
| வானில் | பூச்சி புழு | வந்திப்போம் |
| பேரிடி | கர்த்தன் | பறப்பன |
| அதிகாரி | குலவிடுவோம் | எந்தப்படியாய் |

## சிறுவிடை வினாக்கள்

1. 'ஆர் இதற்கெல்லாம் அதிகாரி?' எதற்கெல்லாம்.?
2. நாம் எதனை எண்ணிடவேண்டும்?
3. 'அத்தனையும் தர ஒரு கர்த்தன் யாரோ எங்கோ இருப்பது மெய்' என்பது எவற்றை எண்ணுங்கால் அறியலாம்?
4. நாம் என்ன செய்யவேண்டும்?
5. நாம் என்ன செய்யக் கூடாது?
6. கடவுள் ஒருவர் உண்டு என்பதை எவ்வாறு மெய்ப்பிக்கலாம்?

## பயிற்சி—1

*கார் + இருள்—காரிருள். இது மாதிரிச் சேர்த்து எழுது :—*

பேர் + இடி

ஆர் + இதற்கு

இதற் கெல்லாம் — இதற்கு + எல்லாம். இதுபோல் பிரித்து எழுது :—

மின்னலெதனாலே—

நிறங்களுருவங்கள்—

அனைவருமன்பாய்—

எவரதனை—

நமக்கென்ன—

## பயிற்சி—2

திரிவது, அதிகாரி, தொழுதால், எந்தப்படியாய் — இவற்றை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது :—

| | |
|---|---|
| ஆடு—ஆடுகள் | குதிரை—குதிரைகள் |
| மாடு—மாடுகள் | யானை—யானைகள் |
| எருமை—எருமைகள் | புலி—புலிகள் |
| பறவை—பறவைகள் | பூனை—பூனைகள் |
| படம்—படங்கள் | மேஜை—மேஜைகள் |

மேலே உள்ள வார்த்தைகளைப் படியுங்கள். என்ன அறி கிறீர்கள்? ஆடு என்ற பொழுது அச்சொல் ஓர் ஆட்டைக் குறிக் கிறது என்று அறிகிறீர்கள் அல்லவா? ஆடுகள் என்ற பொழுது ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு முதலாகப் பலவானவற்றைக் குறிக் கிறது அச் சொல் என்று நீங்கள் அறிகிறீர்கள். அது ஒரு பொருளைக் குறித்தால் ஒருமை எனப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு முதலாகப் பலவான பொருளைக் குறித்தால் பன்மை எனப் படும். எனவே, ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை; ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பன்மை. ஒருமையும் பன்மையும் எண் என்ற பெயரால் வழங்கப்படும். எண்ணிக் காட்டுவதால் எண் எனப்பட்டது.

பிள்ளைகளே, கீழ்வரும் சொற்களில் ஒருமை, பன்மைச் சொற் களைத் தனித்தனியாக எடுத்து எழுதுங்கள் :—


1. எங்கள் வகுப்பில் பத்து பெஞ்சுகளும், இரண்டு நாற்காலி களும், ஒரு மேஜையும் உள்ளன.

2. அந்தக் கூண்டில் ஒரு புலி இருக்கிறது. அந்தத் தொட் டியில் பல மீன்கள் இருக்கின்றன.

3. இப் பீரோவில் முந்நூறு புத்தகங்கள் இருக்கின்றன. அந்த மேஜையில் ஒரு பேனா இருக்கிறது.

4. வகுப்பில் நாற்பது பிள்ளைகள் இருக்கிறார்கள். வகுப்பில் ஓர் ஆசிரியர் இருக்கிறார்.

5. எங்கள் பள்ளிக்கூடத்தில் பத்து வகுப்புகள் உள்ளன. உங்கள் வகுப்பில் எத்தனை பிள்ளைகள்?



## 15. யானை

நீங்கள் பல மிருகங்களைப் பார்த்திருப்பீர்கள். மிருகங்களில் பெரியது எது தெரியுமா? யானைதான். யானை மிருகங்கள் யாவற்றிலும் பெரியது. மிருகங்களை நாட்டு மிருகம், காட்டு மிருகம் என இருவகையாகப் பிரிக்கலாம். யானை காட்டு மிருகம்.

யானையைப் பாருங்கள். அது மிகப் பருத்த சரீரம் உடையது. அதன் கண்களோ மிகச் சிறியவை; வால் குட்டை; காதுகளோ முறம் போன்றவை. கால்கள் உரல் போன்றன. தலையோ மிகப் பெரிது. அதன் நெற்றிக்கு மத்தகம் என்று பெயர். அதன் முகத்தில் நீளமாய்த் தொங்கும் ஓர் உறுப்பு உண்டு. அதனைத் தும்பிக்கை என்பர். அந்தக் கை உறுப்பு வேறு எந்த மிருகத்திற்கும் இல்லை. தும்பிக்கை மிகவும் வலிமையானது. அதன் நுனியில் மென்மையானதும் கூர்மையானதும் விரல் போன்றதுமான உறுப்பு ஒன்று உண்டு. அதனால்

சிறிய ஊசியையும் யானை தரையிலிருந்து எடுத்து விடும். யானையின் கண்கள் சிறியவையாயினும் மிகக் கூர்மையுடையவை.

தும்பிக்கையின் இருபுறங்களிலும் வாயிலிருந்து முளைத்து வந்த இரு கொம்புகள் யானைக்கு உண்டு. அவை தந்தம் எனப்படும். ஆண் யானைக்குத்தான் கொம்புகள் உண்டு. பெண்யானைக்குக் கொம்புகள் இல்லை. தும்பிக்கையால்தான் யானை நீரை உறிஞ்சிக் குடிக்கிறது. தும்பிக்கை துவார முடையது.

நிலத்தில் வைக்கப்பட்ட அரிசி முதலியவற்றைத் தும்பிக்கையால் உறிஞ்சி அதனை வளைத்து வாய்க்குள் போட்டுக் கொள்ளும். யானை தும்பிக்கையால் கிளைகளை முறித்தும் இலைகளை உருவியும் தின்னும். யானைக்குத் தும்பிக்கை கைபோல் பெரிதும் பயன் படுகிறது.

யானை குறுகிய கழுத்தை உடையது. அதனால் அது கழுத்தைத் திருப்ப முடியாது. திரும்பிப் பார்க்க வேண்டுமானால் உடல் முழுவதையும் திருப்ப வேண்டும். யானை கரிய நிறம் உடையது. மேல் தோல் சொரசொரப்பாயிருக்கும். வாலின் நுனியில் கொஞ்சம் மயிர்தான் உண்டு.

யானை இலை, கிளை, அரிசி, புல் முதலியவற்றைத் தின்னும். யானைக்குக் கரும்பின்மேல் அதிகப் பிரியம்.

யானை கூட்டங் கூட்டமாய்க் காட்டில் வசிக்கும். யானையைப் பிடித்து வந்து பழக்கினால் அது பல வேலைகளைச் செய்யும். முன் காலத்தில் யானைப் படைகளை அரசர்கள் வைத்திருந்தனர். யானை மிக்க பளுவைச் சுமக்கும். யானையின் வயது நூறு முதல் நூற்றைம்பது வரை என்பர்.

யானைத் தந்தம் விலை அதிகம். அதனால் அழகிய

உருவங்கள், பெட்டிகள், பூண்கள் முதலியன செய்ய லாம். யானையின் எலும்புகளும் உறுதியானவை; உபயோகமுள்ளவை. அதன் தோல் படகு, பரிசல் முதலானவற்றிற்கு உதவும். யானை மனிதன் கூறும் மொழிகளை அறிந்து அதற்கேற்பச் செய்யும் அறி வுடையது. யானையை அரசர்கள் அரண்மனை களிலும், கோயில்களிலும் காணலாம்.

யானை மேய்ப்பானைப் பாகன் என்பர். மாவுத்தன் என்ற பெயரும் உண்டு. மாவுத்தன் கையில் அதனை அடக்கி நடத்த அங்குசம் என்ற கருவியிருக்கிறது. யானையின் கழுத்திலும், அதன் உடலில் இரு பக்கங் களிலும் தொங்குமாறு மணி கட்டியிருப்பார்கள். யானை அசைந்து ஆடிக்கொண்டு கம்பீரமாக வரும். யானை வருவதை மணியோசையால் அறியலாம். அதனால்தான் 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்ற பழமொழி உண்டாயிற்று. யானை உயிரோடிருப்பினும் இறப்பினும் பயன் படுவ தால் யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந் தாலும் ஆயிரம் பொன் என்பர். யானை தனக்கு யாரேனும் தீங்கு செய்தால் அதனை நினைவில் வைத்துக் கொள்ளும். சமயம் வாய்க்கும் பொழுது தீங்கு செய்து விடும். அதனால் 'யானை கவுள் அடக் கும்' என்பர் பெரியோர். தீங்கு செய்தவன் அந்த யானையோடு பழகிவரும் யானைப் பாகனயினும் அது விடாது. ஆதலால் அதனிடம் யானைப் பாகனும் மிக ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டும். 'யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்' என்றும் பெரி யோர் கூறியுள்ளார்.

## அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| சரீரம் | உறிஞ்சி | திரும்பி |
| மத்தகம் | முறிந்து | பளு |
| வாய்க்கும்பொழுது | உருவி | பரிசல் |
| தந்தம் | கவுள் | கம்பீரம் |

## சிறுவிடை வினாக்கள்

1. யானைக் கொம்புக்குப் பெயர் யாது?
2. தும்பிக்கையைப் பற்றி நீ அறிவதென்ன?
3. யானை திரும்பிப் பார்க்க யாது செய்யும்? ஏன்?
4. தந்தத்தின் உபயோகம் என்ன?
5. யானையினால் பயன் என்ன?
6. யானையை மேய்ப்பவனுக்கு என்ன பெயர்?
7. யானையைப் பற்றிக் கூறும் இரண்டு பழமொழிகள் யாவை?

## பயிற்சி—1

படி :—பருத்த × மெலிந்த, சிறியவை × பெரியவை.
குட்டை × நெட்டை, இல்லை × உண்டு.
வன்மை × மென்மை. இவை எதிர்ப்பதங்கள்.

இதுபோல் எதிர்ப்பதங்கள் எழுது :

| | |
|---|---|
| ஆண் × | வளைந்து × |
| நுனி × | முன்னே × |
| தீங்கு × | பளு × |



## 16. அறிவின் திறமை

மக்களுக்கு இயல்பாக இறைவனால் கொடுக்கப் பட்ட செல்வம் அறிவு. அறிவு எல்லோருக்கும் இருக் கிறது. ஆயினும் அந்த அறிவைத் தகுந்த வழியில் உபயோகித்தால் பல நன்மைகளே உண்டாக்கும். பின்னும் அறிவை நல்ல வழிகளில் உபயோகித்தால் அது வளர்ச்சியடையும். அதனால் அறிவை உடைய வனுக்கும் பிறருக்கும் பல நன்மைகள் உண்டா கின்றன.

ஸ்காட்லாந்து ஒரு தேசம். அதில் கிரீனுக் என்பது ஒரு பட்டணம். அதில் ஓர் எளிய குடும் பத்தில் ஜேம்ஸ் உவாட் பிறந்தார். அவர் தாயார் மிக்க வயதானவள். ஒரு நாள் மிகவும் குளிராக இருந்தது. கதவுகளும் ஜன்னல்களும் மூடப்பட் டிருந்தன. உள்ளே வெந்நீர்க் கொப்பரை ஒன் றிருந்தது. வெந்நீர் 'தள தள' என்று கொதித்துக் கொண்டிருந்தது. ஆவி 'உஸ் உஸ்' என்று மேலே கிளம்பிற்று. அதனை ஜேம்ஸ் உவாட் கவனித்துக்

கொண்டிருந்தார். அது அவர்க்கு வேடிக்கையாக இருந்தது. நீராவியின் சுழற்சியையும் வேகத்தையும் அவர் கவனித்தார். நீராவி மூடியைத் தூக்குவதையும் கவனித்தார். அதனுல் நீராவிக்குள்ள வலிமை ஜேம்ஸ் உவாட்டுக்குப் புலப்பட்டது. கொப்பரையின் மேல் மூடியைக் கிளப்பிக் 'குப் குப்' என்று வெண்ணிற ஆவி மேலே வருவதைக் கண்டார் உவாட். அவருக்குப் பலபல எண்ணங்கள் தோன்றின.

நீராவியின் வலிமையால் பற்பல அரிய வேலைகளைச் செய்யலாம் என்று ஜேம்ஸ் உவாட்டுக்குத் தோன்றிற்று.

ஜேம்ஸ் உவாட் நீராவியை ஒரு பாத்திரத்தில் அடைத்தார். அது மேலும் கீழுமாய்ச் சுழல்வதைக் கண்டார். அவ்வாறு சுழலும் நீராவியில் ஒரு மரத் துண்டைப் போட்டார். அம்மரத்துண்டும் நீராவியுள் சுழல்வதை அறிந்தார். ஜேம்ஸ் உவாட் பின் சும்மா இருக்கவில்லை. அவர் அறிவு வேலை செய்யத் தொடங்கிற்று. அவர் சிறு வயதிலிருந்து பல முயற்சிகளைச் செய்து பார்த்தார். அவற்றின் பயனுய் நீராவியின் உதவியால் பலவித எந்திரங்களை ஒடும்படி செய்யலாம் என்று ஜேம்ஸ் உவாட் உணர்ந்தார். அதனுல் பல தொழில்கள் மேன்மை அடையக்கூடும் என்பதை உணர்த்திஞர். நீராவியின் ஆற்றலைத் தெளிவாக அறிந்து உலகிற்கு வெளிப்படுத்திஞர். அரசாங்கத்தார் 'நைட்' என்ற பட்டத்தை அளித்துப் பெருமைப் படுத்தினர். நீராவியின் செயலால் விளைந்த நன்மைகள் எல்லாம் ஸர் ஜேம்ஸ் உவாட் என்பவரின் அறிவின் செயலே அல்லவா?

இங்கிலாந்தில் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஓர் எளிய குடும்பத்தில்

ஜியார்ஜ் ஸ்டீவென்ஸன் பிறந்தார். இளமையில் ஜியார்ஜ் மாடு மேய்த்து வந்தார். அவருக்கு இளமையில் கல்வி கற்க இயலவில்லை. அவர் தம் ஒழிவு நேரத்தில் தந்தையோடு சுரங்கத்திற்குச் செல்வார். அங்கு ஜியார்ஜ் எந்திரங்களை எல்லாம் மிகக் கவனத்தோடு பார்ப்பார். எந்திரங்களைப் பொறி என்னும் சொல்லாலும் கூறலாம். நாளடைவில் ஜியார்ஜ் எந்திர உணர்ச்சி பெற்றார். சுரங்கத் தலைவர் நீர் இறைக்கும் எந்திரப் பொறுப்பை ஜியார் ஜிக்கு அளித்தார்.

எந்திரங்களைப்பற்றிக் கூறும் நூல்களைப் படிக்க வேண்டும் என்று ஜியார்ஜ் பெரிதும் விரும்பினார். பகலில் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்துவிட்டு இரவில் ஓர் இராப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க லானார். இளமையில் கல்வி பெறாத குறையை நினைத்து அவர் வருந்தினார். அவர் தம் முயற்சியால் நன்கு கற்றுப் பொறிகளைப் பற்றிய நூல்களையும் படித்து அறிந்தார். ஓய்வு நேரங்களில் அவர் செருப்புத் தைத்தார்.

அவர் தம் அறிவின் திறத்தால் பற்பல இடங் களில் அரிய வேலைகள் பல செய்து காட்டினார். கில்லிங் வொர்த் என்னும் இடத்தில் ஜியார்ஜ் நிலக்கரி வண்டித் தொடர் ஒன்று தண்டவாளத்தின்மீது ஓடுமாறு செய்து காட்டினார். இதனால் பல குதிரைகள், பல ஆட்கள் வேலை குறைந்தது. பின், ஜியார்ஜ் மக்களை ஏற்றிச் செல்லும் வண்டியைக் கண்டு பிடித்தார். அதனால் அவருக்குப் 'புகைவண்டி நிபுணர்' என்ற பெயர் உண்டாயிற்று. கூலியாட் களின் போக்கு வரவும் எளிதாயிற்று.

லிவர்பூல் என்னும் இடத்திலிருந்து மான்செஸ்டர்

என்னும் இடத்திற்கு இருப்புப்பாதை அமைத்துத் தரும்படி ஜியார்ஜைப் பலர் வேண்டினர். அவரும் ஒப்புக் கொண்டார். அதுவே முதல் முதல் அமைத்த இருப்புப்பாதை. அக்காலத்தில் இருப்புப் பாதை அமைத்தலைப் பற்றிப் பலர் பலவாறு கூறினர். ஜியார்ஜ் அவைகளைப் பொருட் படுத்தவில்லை. ஜியார்ஜ் தாம் முதல்முதல் அமைத்த இருப்புப் பாதையில் ஓடும் எந்திரத்திற்குப் 'பாணம்' என்ற பெயரிட்டார். ஒரு வண்டித் தொடரில் மக்களை ஏற்றி ஓட்டிக் காட்டினார். அந்த எந்திரம் மற்ற வண்டிகளை இழுத்துக்கொண்டு மணிக்கு முப்பது மைல் வேகத்தில் ஓடிற்று.

இவ்வாறு ஜேம்ஸ் உவாட் நீராவியின் வலிமையை வெளிப்படுத்த, ஜியார்ஜ் ஸ்டீவென்ஸன் அதனைக் கொண்டு 'ரயிலைக்' கண்டு பிடித்தார். அதுமுதல் புகைவண்டி எந்திரசாலை ஒன்று ஏற்பட்டது. பல புகைவண்டி எந்திரங்கள் செய்யப்பட்டன. பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. ஸ்டீவென்ஸன் பெருஞ் செல்வம் திரட்டி இனிது வாழ்ந்தார்.

இக்காலத்தில் உலகில் எங்கும் இருப்புப் பாதைகள் அமைந்துள்ளன. இருப்புப் பாதையின் மூலமாக ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து செல்கிறோம். பிரயாணம் இன்பமாகவும் செலவு சுருக்கமாகவும், குறுகிய காலத்திலும், எளிதாகவும், சுகமாகவும் நடைபெறுகின்றது. பல்வேறு நாடுகளையும் மக்களையும் கண்டு பழகுகிறோம். பல்வேறு நாட்டுப் பொருள்களைப் பெற்று வியாபாரத்தை வளர்க்கிறோம். இவையெல்லாம் உண்டாக அவ்விருவர்களின் அறிவின் திறனே காரணம் அன்றோ!

## அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| செல்வம் | புலப்பட்டது | நிபுணர் |
| வளர்ச்சி | கிளப்பி | உணர்ச்சி |
| வெந்நீர் | நீராவி | இறைக்கும் |
| கொப்பரை | ஆற்றல் | தைத்தல் |
| சுழற்சி | பிரயாணம் | இறைவன் |
| தூக்குவது | மேன்மை | பொருட்படுத்தல் |

## சிறுவிடை வினாக்கள்

1. ஜேம்ஸ் உவாட் எங்குப் பிறந்தார்? அவர் வெந்நீர் கொதித்துக் கொண்டிருந்த போது கண்டறிந்தது என்ன?

2. ஜேம்ஸ் உவாட் எதனை உணர்ந்தார்? எதனை வெளிப் படுத்தினார்?


3. ஜியார்ஜ் ஸ்டீவென்ஸன் யார்? ஸ்டீவென்ஸன் இளமைப் பருவமும் கல்வியும் என்பது பற்றி எழுது.

4. அவருக்குப் புகைவண்டி நிபுணர் என்று பெயர் வரக் காரணம் என்ன?

5. முதல் முதல் எங்கு இருந்து எங்கு இருப்புப் பாதை ஏற்பட்டது?

## பயிற்சி

ஸ்டீவென்ஸன் பெருஞ்செல்வம் திரட்டி இனிது வாழ்ந்து வந்தார். இதனை இரண்டு சிறு வாக்கியங்களாக எழுது.





## 17. சுத்தம்

'சுத்தம் சோறு போடும்; சுத்தமே சுகம் தரும்' என்பன பொன்மொழிகள். சுத்தத்தை எல்லோரும் விரும்புவர். ஒவ்வொருவனும் எல்லாவகையிலும் சுத்தமாயிருக்க வேண்டும். ஒருவன் சுத்தமா யிருந்தால் அவனை நோய் அணுகாது. அவன் இந்த உலகில் சுகமாக வாழலாம்.

சுத்தமானவற்றை யாவரும் விரும்புவர். சுத்தம் என்பது வீடு, உடை, உடல், உணவு என்பவற்றில் இருத்தல் மிகவும் முக்கியமானது. வீடு சுத்தமா யிருந்தால் நோய் உண்டாகாது. நோய் கிருமிகளால் தான் உண்டாகிப் பரவுகிறது. வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொண்டால் நோய்க் கிருமிகள் உண்டாகா.

வீட்டினை அடிக்கடி கழுவவேண்டும். வருடத் திற்கு இருமுறை சுவர்களுக்குச் சுண்ணும்பு பூச வேண்டும். சுண்ணும்பு பூசுதலை வெள்ளை அடித்தல் என்பர். சுண்ணும்பு பூசுவதால் சுவர்கள் 'பளிச்'

என்று இருக்கின்றன. அம்மட்டுமன்றிச் சுண்ணும் பின் காரத்தால் நோய்க்கிருமிகள் இறந்தொழி கின்றன.

வீட்டின் கூரையையும் நாம் மாற்றவேண்டும். கதவு, ஜன்னல், தூண் முதலானவைகளுக்கு மர எண்ணெய் பூசவேண்டும். வீட்டைச் சுற்றி நீர் தேங் காமல் பார்க்க வேண்டும். கழிநீர் ஓடும் ஜல தாரை களைச் செம்மையாகக் கட்டி நீர் தேங்காமல் ஓடும்படி செய்யவேண்டும்.

அடுத்தபடியாக நம் உடையும் சுத்தமா யிருக்க வேண்டும். நம் உடைகளைத் தினமும் தோய்த்து 'முற முற' எனக் காயவைத்து அணிய வேண்டும்.

அழுக்கு ஏறிய ஆடைகளை அணியக்கூடாது. அழுக்குப் படிந்த ஆடைகளை அணிந்துகொண்டால் பிறர் நம்மை மதியார். அதுமட்டுமல்ல, அதனல் நோய் உண்டாகும். அழுக்கேறிய ஆடைகளை அணி வதால் நம் உடலின்மேல் உள்ள தோலில் பலவித நோய்கள் உண்டாவதைக் காணலாம். சிலேப்பேன் என்னும் நோயை உண்டாக்கும் பூச்சி அழுக்காடை யில் உண்டாகும். மற்றும் அழுக்கேறிய ஆடை நாற்றம் வீசும். உடலில் உண்டாகும் வேர்வையாலும் ஆடைகள் நாற்றம் எடுக்கும். ஆதலால், ஆடைகளை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். "கந்தையானுலும் கசக்கிக் கட்டு" என்ற பழ மொழியை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் அன்றோ?

நாம் உடலை மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ள வேண்டும். உடல் சுத்தமாயிருந்தால்தான் நம் வாழ்க்கை இன்பமாக இருக்கும். உடல் சுகமான நிலையில் இருந்தால்தான் நாம் எந்த வேலையையும் இன்பமாகவும் எளிதாகவும் செய்யலாம். உடலைப்

போஷித்து நோய் உண்டாகாதபடி வைத்துக்கொள்ள வேண்டுவது நம் முதற்கடமையாகும். நோயுடையவன் தானும் துன்பப்படுகிறான்; பிறருக்கும் துன்பம் அளிக்கிறான். அவனால் யாருக்கும் ஒரு நன்மையும் இல்லை. அவனால் உண்டாவது துன்பமே. ஆதலால், அவன் பூமிக்குப் பாரம். நோயுள்ளவனை எல்லோரும் வெறுப்பார்கள். நோயினால் உடலின் வலிமையும், அழகும் கெடுகின்றன. ஆதலால், உடலை நோயில்லாமல் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

உடலில் வேர்வை உண்டாகிறது. காற்றினால் உடலில் தூசி படிகின்றது. உடலில் அழுக்கு உண்டாகிறது. அழுக்கும் வேர்வையும் சேர்ந்தால் உடலில் நாற்றமுண்டாகிறது; நோய் உண்டாகிறது. எனவே, நாம் உடலைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளத் தினந்தோறும் குளிக்க வேண்டும். நல்ல நீரில் குளிக்க வேண்டும். குளிக்கும் பொழுது உடலைத் தேய்த்து அழுக்குப் போகக் குளிக்க வேண்டும். அழுக்கைப் போக்கச் சோப்பு, சீயக்காய்த் தூள் என்பவற்றை உபயோகப்படுத்தலாம். சிறு பின்னல் துண்டினால் உடலைத் தேய்த்துக் குளித்தல் நல்லது. அதிகாலையில் குளிப்பது நல்லது. அதனால் உடலிலுள்ள சூடு தணியும்; சுறுசுறுப்பு உண்டாகும். பின்னும் தேகம் வலிமை பெற்று விளங்கும். உஷ்ணம் தணியவும், தோலின் பளபளப்பு குன்றாமலிருக்கவும் வாரம் இரு முறை எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். தேகம் வலிமைபெறத் தினந்தோறும் உடற்பயிற்சி செய்யவேண்டும். உடற்பயிற்சியினால் உடல் உறுப்புக்கள் இறுகி வலிமை பெறும். இரத்த ஓட்டம் செம்மையாக இருக்கும். "கூழானாலும் குளித்துக்

குடி" என்ற பழமொழியை நீங்கள் அறிவீர்கள் அன்றோ? நல்ல காற்றும் சூரிய வெளிச்சமும் தேகத்தில் படும்படி காலையிலும் மாலையிலும் உலாவி வருதலும் உடலுக்கு நல்லது. இவற்றால் தேகத்தைச் சுத்தமாகவும் நோயில்லாமலும் வைத்துக் கொள்ளலாம்.

நம் உடல் செம்மையான நிலையில் இருக்க உணவு வேண்டும்; உணவு இல்லாவிடில் உடல் தளர்ந்து சோர்ந்துவிடும். நாம் உணவு விஷயத்தில் மிகவும் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும். நம் உணவு தூயதாகவும் வலிமை தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். நன்றாய் வேகவைத்த சத்துள்ள பொருள்களையே உண்ணவேண்டும். பழங்கள், பால், நெய், பருப்பு வகைகள், காய்கறி என்பன உடல் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானவை. அழுகிய கனிகளை உண்ணக்கூடாது. நீரைக் காய்ச்சி ஆற வைத்துக் குடிப்பது மிகவும் நல்லது. எந்த உணவையும் மிதமாகவும் அளவோடும் உண்ணவேண்டும். உண்ணுங் காலத்தில் அவசரப் படக்கூடாது. நன்கு மென்று உண்ணவேண்டும். குறிப்பிட்ட காலத்தில் உணவு உண்ணுதல் நல்லது. 'பசித்துப் புசி' என்பர் பெரியோர். ஆதலால், உண்ட உணவு ஜீரணமாக உழைக்கவேண்டும். பசியில்லாத பொழுதும், காலம் தவறியும் உணவு உண்ணலாகாது. 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்.' ஆதலால், அளவோடு குறித்த காலத்தில் உணவு உட்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக மனம் பரிசுத்தமாக இருக்க வேண்டும்; மனம் கெட்டு விட்டால் வாழ்க்கையில் இன்பம் இராது. மனம் கெட்டுவிட்டால் கவலைகள் உண்டாகும். அதனால் நோய்கள் உண்டாகும்; தேக

பலம் குறையும். 'மனக்கவலை பலக்குறைவு' என்பர் பெரியோர். மனம் குற்றமில்லாமல் இருக்கவேண்டும். கெட்ட எண்ணங்கள், பொய், வஞ்சகம், பொறாமை முதலியன மனத்தைக் கெடுத்துவிடும். மனம் தூய்மையாக இருக்கவேண்டுமானால் இவற்றை நீக்கவேண்டும். மனம் மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் இருந்தால்தான் எந்தக் காரியத்தையும் எளிதில் செய்யலாம். உடலைச் சுத்தமாக்க நீரில் குளிக்கிறோம். மனத்தைத் தூய்மைப்படுத்த உண்மை பேசவேண்டும். தெய்வ பக்தியும் உடையவராக இருக்கவேண்டும். மனம் தூய்மையாயிருந்தால் நல்லொழுக்கமும் நற்செயல்களும் உண்டாகும். அதனால் கீர்த்தி உண்டாகும். வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் உண்டாகின்றன. அவை உண்டாவதற்குக் காரணம் மனமே. 'மனம்போல வாழ்வு' என்று சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? மனத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள அறிவு அவசியம். நம் அறிவால் மனம் தீயவழிகளில் செல்லாமல் தடுக்கலாம். 'மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்று ஒரு பெரியார் கூறுகிறார்.

எனவே, வாழ்க்கைக்கு ஆதாரமாய் இருப்பது சுத்தம். அச்சுத்தம் வீடு, உடை, உடல், உணவு, மனம் என்பவற்றில் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும் என்பது விளங்குகிறது அல்லவா?

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| பொன்மொழிகள் | பூசுதல் | சீலைப்பேன் |
| அணுகாது | சுண்ணாம்பு | கசக்கி |
| இருத்தல் | தேங்காய் | போஷித்து |
| கிருமிகள் | கழிநீர் | கடமை |

| | | |
|---|---|---|
| பரவுகிறது | தோய்த்து | பாரம் |
| அடிக்கடி | அழுக்கு | வெறுப்பார்கள் |
| கெடுகின்றன | படிகின்றது | வேர்வை |
| பின்னல் | குன்றுமல் | பளபளப்பு |
| உடற்பயிற்சி | உலாவி | தளர்ந்து |
| சோர்ந்து | ஜீரணம் | பக்குவமான |
| சத்துள்ள | வேகவைத்து | மிதமாக |
| ஆறவைத்து | தடுக்கலாம் | ஆதாரமாய் |

## சிறுவிடை வினாக்கள்

1. சுத்தமாயிருத்தலின் நன்மை என்ன?
2. நோய் எதனுல் பரவுகிறது?
3. வீட்டினைச் சுத்தம் செய்வதெப்படி?
4. உடைச் சுத்தம்பற்றி நீ அறிந்ததென்ன?
5. அழுக்காடையால் உண்டாகும் தீமைகளை எழுது.
6. உடற்சுத்தம்பற்றி நாம் செய்யவேண்டுவன யாவை?
7. அதிகாலையில் குளிப்பதின் நன்மை என்ன?
8. உடற்பயிற்சி பற்றி அறிவதென்ன?
9. ஏன் உணவு அவசியம்?
10. நாம் எத்தகைய உணவைக் கொள்ளவேண்டும்?
11. ‘பசித்துப் புசி’ என்றது ஏன்?
12. மனம்பற்றி என்ன அறிகிருய்?
13. மனத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வது எப்படி?
14. மனத்தூய்மையால் உண்டாகும் நன்மை என்ன?
15. வாழ்க்கையில் உண்டாவன யாவை? ஏன் உண்டாகின்றன?

## பயிற்சி–1

இப்பாடத்தில் வந்துள்ள முன்ஞேர் வாக்கியங்களை எடுத்து எழுது.

## பயிற்சி–2

அடியில் ஒன்றின்கீழ் ஒன்றாய் இருவரிசைகளில் சொற்கள் தரப்பட்டுள்ளன. எது எதற்குப் பொருந்தும் என்பதை ஆராய்ந்து எழுது :—

| | | | |
|---|---|---|---|
| 1. | யானை | 1. | அறிவை விருத்தி செய்கிறது |
| 2. | சிங்கம் | 2. | நிழல் தருகிறது |
| 3. | பசு | 3. | மாமிசம் தின்னுகிறது |
| 4. | எலி | 4. | நகை செய்ய உதவும் |
| 5. | பூனை | 5. | பெரிய மிருகம் |
| 6. | சேனைத்தலைவன் | 6. | உருண்டை வடிவம் |
| 7. | உழவன் | 7. | போர்க்களத்தில் இருக்கிறான் |
| 8. | அரசன் | 8. | பாடம் கற்பிக்கிறார் |
| 9. | காந்தி | 9. | வைக்கோற்போர் போடுகிறான் |
| 10. | பாம்பு | 10. | ஒரு மகான் |
| 11. | ஆசிரியர் | 11. | பால் தருகிறது |
| 12. | உலகம் | 12. | பூனைக்கு இனிய உணவு |
| 13. | பொன் | 13. | எலியைப் பிடிக்கும் |
| 14. | மரம் | 14. | புற்றில் வசிக்கிறது |
| 15. | கல்வி | 15. | நாட்டை ஆளுகிறான் |



## 18. குமணன்

தமிழ் நாட்டில் பல மலைகள் உள்ளன. அவற்றுள் முதிர மலை என்பது ஒன்று. அதனை இக்காலத்தார் குதிரை மலை என்பர். முதிர மலையும் அதனைச் சேர்ந்த நாடும் வளம் மிக்கன. அந்த நாட்டை முன்பு ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் பெயர் குமணன் என்பது ஆகும்.

குமணன் நல்ல வேந்தன். அவன் கல்வியை நன்றாய்க் கற்றிருந்தான். அவனிடம் நற்குணங்கள் பல நிரம்பியிருந்தன. அவன் யாவர்க்கும் இல்லை என்னுமல் எதனையும் கொடுப்பான். கொடுப்பது என்பது அவனுக்கு இயல்பாக அமைந்த குணம். அதனால் அவனை யாவரும் வள்ளல் என்று சிறப்பாகக் கூறுவர். வள்ளல் என்பவன் இல்லை என்னுமலும், அளவில்லாமலும் கொடுப்பவன் ஆவன். குமணனுக்குத் தமிழ் மொழியிடத்தும் தமிழ்ப் புலவ

ரிடத்தும் அளவில்லாத பற்று உண்டு. தமிழ்ப் புலவர்கள் அவனை அடைந்து அவன் புகழைப் பாடிப் பரிசு பெற்றுச் செல்வார்கள். ஏழை எளியவர்கள் தன் துன்பம் நீங்கக் குமணனைக் கண்டு வேண்டும் பொருள்களைப் பெற்றுச் செல்வார்கள். குமணனுக்கோ கொடுத்து மகிழ்வதில் பெரு விருப்பம் உண்டு.

குமணன் புகழ் எங்கும் பரவியது. தமிழகம் எங்கும் குமணனைப் பற்றி அறியாதவர் எவரும் இலர். குமணன் புகழ் சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவேந்தர் புகழினும் மேம்பட்டு விளங்கியது. இவ்வளவு புகழும் எதனால் உண்டாயிற்று? கொடுத்தலினால் அல்லவா? தம்மிடத்து உள்ளதைக் கொடுத்து அழியாத புகழை அடைவதே செல்வம் உள்ளவர் மேற்கொள்ள வேண்டிய செயலாகும்.

குமணனுக்குத் தம்பி ஒருவன் உண்டு. அவனை அமணன் என்றும், இளங்குமணன் என்றும் அழைப்பார்கள். அவன் குமணனுக்கு நேர் மாறான குணங்களை உடையவன். அவனுக்குத் தீயோர் நட்பு ஏற்பட்டது. அதனால் அவன் தீய எண்ணங்களை உடையவன் ஆனான். அண்ணன் செயல் அவனுக்குப் பிடிக்கவில்லை. “பிறருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தால் எவ்வளவுதான் செல்வம் இருந்தாலும் குறைந்து விடாதா?” என்று தீய நட்பாளர் அமணனுக்குக் கூறினர். அவர்கள் சொன்னது அமணனுக்கு நியாயம் எனப்பட்டது; அண்ணன் மீது கோபம் உண்டாயிற்று. அதனால் இளங்குமணன் அண்ணன் கொடுத்தலைத் தடுத்தான். குமணனோ யாசிப்பவர்க்குக் கொடுக்காமல் இருக்கமாட்டான். இதனால் சகோதரர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டது.

இளங்குமணன் குமணனைக் காட்டிற்குத் துரத்தி விட்டுத் தான் அரசன் ஆனான். குமணன் காட்டில் வசித்து வந்தான்.

இளங்குமணன் செயலை எல்லோரும் வெறுத்தனர்; பழித்தனர். அவனுக்குக் கோபம் உண்டாயிற்று. குமணன் உயிரோடிருந்தால் தனக்குப் புகழ் உண்டாகாது என்பதை அவன் அறிந்தான். குமணனைக் கொன்றுவிடவும் துணிந்தான் இளங்குமணன். குமணன் தலையை வெட்டிக்கொண்டு வருபவருக்கு ஆயிரம் பொன் பரிசு அளிப்பதாகப் பறை அறைவித்தான். அது கேட்டு நாட்டு மக்கள் துடித்தனர்; இளங்குமணனைப் பழித்து இகழ்ந்தனர்.

பெருந்தலைச் சாத்தனார் என்பவர் ஒரு சிறந்த தமிழ்ப் புலவர். அவர் தமிழ் நூல்களைச் சிறப்பாகக் கற்றவர். சிறந்த கவிகளை அவர் பாட வல்லவர். ஆனால் அவருக்குப் பெரிய குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு இருந்தது. அவருக்குக் குழந்தைகளும் சுற்றத்தாரும் அதிகம். அவர்களைக் காக்க வருவாய் போதவில்லை. அவரைத் தரித்திரம் சூழ்ந்தது. அவர் வீட்டின் ஏழைமை நிலையை எடுத்துக் கூறமுடியாது. அவர் வீட்டு அடுப்பில் பல நாட்கள் தொடர்ந்து காளான் பூத்திருக்கும்.

புலவர் குமணனைப்பற்றிக் கேள்விப் பட்டார். அவனை அடைந்து, தம் புலமையைக் காட்டிப் பரிசு பெற்றுத் தம் தரித்திரத்தை நீக்க அவர் எண்ணினார். பெருந்தலைச் சாத்தனாருக்குக் குமணன் அப்பொழுது இருக்கும் நிலை தெரியாது.

புலவர் குமணனைக் காணப் புறப்பட்டு வந்தார். வரும் வழியில் காடு இருந்தது. அந்தக் காட்டில்தான் குமணன் வசித்தான். புலவர் தள்ளாடிக் கொண்டு

வந்தார். அவருக்குக் களைப்பு ஏற்பட்டது. ஓரிடத்தில் தங்கிக் களைப்பாறினார். பின்பு அவர் புறப்பட்டார். குமணனைப் புலவர் காட்டில் சந்தித்தார். அவன் வேட்டையாட வந்திருக்கிறான் என்று புலவர் நினைத்தார். அவன் மீது ஓர் அழகிய பாட்டைப் பாடினார். புலவர் தம் புலமைத் திறத்தை எல்லாம் அவன் முன் காட்டினார்.

குமணன் புலவரின் புலமையைக் கண்டு வியந்தான். அத்தகைய புலவருக்குக் கொடுக்கப் பொருள் இல்லையே என்று வருந்தினான். ஒரு நினைவு எழுந்தது. தன் உடைவாளை உருவினான் குமணன். அதனை அவன் புலவர் கையில் கொடுத்து, "புலவரே, என் தம்பி என் தலையைக் கொண்டு வருபவருக்கு ஆயிரம் பொன் கொடுப்பதாகப் பறை அறைவித்துள்ளான். என் தலையை வெட்டி என் தம்பியிடம் கொடுத்துப் பரிசுத் தொகையைப் பெற்றுச் செல்லுங்கள்," என்றான்.

புலவர் மனம் குழம்பியது. தலையையும் கொடுக்க முன்வந்த குமணன் கொடைத்திறம் விளங்கியது. புலவர்க்கு அவ்வாறு செய்ய மனம் வருமா? அதனால் அவ்வாறு செய்ய அவர் மறுத்தார். இறந்தால் நாய்க்கும் நரிக்கும் உணவாகும் தனது தலை ஆயிரம் பொன் விலை பெற்று, புலவர் தரித்திரத்தைப் போக்கும் சிறப்புப் பெற்றது கருதிக் குமணன் தலையை வெட்டிச் செல்லுமாறு வற்புறுத்தினான். புலவர்க்கு மனம் வரவில்லை. புலவர் தாம் பெற்ற உடைவாளைக் குமணனிடம் கொடுக்கவில்லை. கொடுத்தால் குமணன் தானே தலையை வெட்டிக்கொண்டால் என்ன செய்வது என்று புலவர் பயந்தார்.

புலவர் செவ்வாழைக் கட்டையில் குமணன் தலை மாதிரி செய்து துணியால் மூடிக்கொண்டு அமண னிடம் சென்றார். வாழைக் கட்டையிலிருந்து நீர் இரத்தம்போல் வழிந்துகொண்டு இருந்தது. புலவர்



அமணனிடம் சென்று, "இதோ குமணன் தலை, ஆயிரம் பொன் பரிசைக் கொடு" என்றார்.

அமணன் இரத்தம் சொட்டுதலைப் பார்த்தான். தன் தவற்றை அவன் உணர்ந்தான். தான் ஆடா விடினும் தன் சதை ஆடும் அல்லவா? "ஐயோ, அண்ணா, என் அறிவில்லாமல் அருமையான அண்ணனை இழந்தேன்" என்று தரையில் வீழ்ந்து புலம்பினான்.

அமணனுக்கு நல்லறிவு ஏற்பட்டதைப் புலவர் அறிந்தார். அதனால் அவர், "அமணா, கேட்பார் பேச்சைக் கேட்டு மதி கெட்டாய். உன் அண்ணனைக் கொண்டு வந்தால் என்ன தருவாய்?" என்றார். மற்

ஞேர் ஆயிரம் பொன் தருவதாகக் கூறினுன் அமணன்.

புலவர் காட்டிற்கு விரைந்து சென்றுர். புலவர் தாம் செய்த தந்திரத்தைக் குமணனுக்குக் கூறிஞர். அவனை நாட்டிற்கு வரும்படி மன்றுடிக் கேட்டுக் கொண்டார். புலவர் திறனைக் குமணன் அறிந்தான். அவரோடு அவன் நாட்டிற்கு வந்தான். குமணன் வருதலை அறிந்த அமணன் எதிர் சென்று அழைத்து வந்தான்; தன்னை மன்னிக்குமாறு புலம்பிக் கேட்டுக் கொண்டான். குமணனுக்கு அரசாட்சியை அளித்து மகிழ்ந்தான். குமணன் வந்தான் என்று கேள்விப் பட்டு நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ந்தனர்.

குமணன் பெருந்தலைச் சாத்தனுருக்கு அள வில்லாப் பொருளை அளித்தான். புலவரின் வறுமை அகன்றது. புலவர் குமணனை வாயார வாழ்த்திச் சென்றுர். குமணன் பின் இன்ப அரசு நடத்தி வந் தான்.

## அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| வேந்தன் | நேர்மாறுன | சகோதரர் |
| நிரம்பி | அள்ளி அள்ளி | பறை அறை |
| வள்ளல் | யாசிப்பவர் | இகழ்ந்தனர் |
| புலவர் | சச்சரவு | பொறுப்பு |
| கவி | காளான் | பூத்திருக்கும் |
| சந்தித்தார் | தள்ளாடி | நினைவு |
| கொடை | குழம்பியது | தரித்திரம் |
| உடைவாள் | வற்புறுத்தி | சொட்டுதல் |
| மேம்பட்டு | மன்றுடி | மதி |

## சிறுவிடை வினுக்கள்

1. முதிர மலைக்கு இக்காலத்தில் வழங்கும் பெயர் யாது?
2. குமணனை வள்ளல் என்று கூறக் காரணம் என்ன?

3. வள்ளல் என்பவர் யார் ?

4. குமணனுக்கு எதில் பெரு விருப்பம் உண்டு ?

5. மூவேந்தர் யாவர்?

6. அமணன் செய்த செயல் யாது ? ஏன் செய்தான் ?

7. பெருந்தலைச் சாத்தனர் யார் ? அவர் நிலை யாது ?

8. அவர் வீட்டின் அடுப்பில் காளான் பூத்திருக்கும் என்பதால் அறிவதென்ன ?

9. புலவர் பாட்டைக் கேட்ட குமணன் யாது கூறி என்ன செய்தான் ?

10. புலவர் யாது செய்தார் ?

11. அமணனுக்கு நல்ல புத்தி எப்பொழுது வந்தது ?

## பயிற்சி—1

1. கீழ்வரும் சொற்களை அமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது.

மேம்பட்டு, நேர்மாறான, அள்ளிஅள்ளி, தள்ளாடி, வற்புறுத்தி, பொறுப்பு.

2. கோடிட்ட இடங்களை நிரப்பு.

(1) கொடுப்பது என்பது——இயல்பாக——குணம்.

(2) குமணனுக்கோ——மகிழ்வதில்——உண்டு.

(3) குமணன் புகழ்——புகழினும்——விளங்கியது.

## பயிற்சி—2

1. செல்வம் உள்ளவர் செயல் யாது ?

2. தீயவரோடு பழகினல் தீய குணங்களும் செயல்களும் உண்டாகும் என்பதை இக் கதையில் எவ்வாறு அறியலாம் ?

## 19. கடிகாரம்

1. சேவற்கோழியுண்டு காகமுண்டு—வானம்
செக்கச் சிவந்து தெரிவதுண்டு
மேவு பொன்னே அதிகாலே தெரிந்திட
வேறு கடிகாரம் வேண்டுமோடி ?

2. செங்கதிர் பொங்கி வருவதுண்டு—நல்ல
செந்தாமரைகள் மலர் வதுண்டு
மங்கையே காலேப் பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி ?

3. தன்னிழல் தன்னடி யாவதுண்டு—சுடர்
தானும் தலேநேர் எழுவதுண்டு
இன்னமுதே பகல் உச்சியி தென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி?

4. விண்மணி ஆழியில் வீழ்வதுண்டு—வாசம்
வீசு மந்தாரை மலர்வதுண்டு
கண்மணியே மாலேக்காலம் குறித்திடக்
கையில் கடிகாரம் வேண்டுமோடி ?

5. அம்புவி நட்சத்திரங்களுண்டு—கணக்கு
ஆக்கி அறிய வழிகளுண்டு
இன்பமே நேரம் இரவில் அறிந்திட
இன்னும் கடிகாரம் வேண்டுமோடி ?

—கவிமணி
**சி. தேசிகவிநாயகம் பிள்ளே**

**அரும் பதங்கள்**

| | | |
|---|---|---|
| சேவல் | மங்கை | அதிகாலே |
| செக்கச் சிவந்து | இன்னமுதே | அம்புவி |
| பொன்னே | விண்மணி | மலர்வது |
| செங்கதிர் | கண்மணி | மேவு |

### சிறுவிடை வினாக்கள்

1. பொழுது விடியும் காலம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
2. செங்கதிர்—யாது?
3. சூரியன் தோன்றினால் எது மலரும்?
4. தன் நிழல் தன் அடி ஆவது எப்பொழுது?

### பயிற்சி

1. கடிகாரத்தின் பயன் என்ன?
2. இயற்கையில் பொழுதை அறிவதெப்படி?
3. ஒரு நாளில் பல பாகங்களைக் கூறு.

## இலக்கணம்

## வினைச்சொல்

| | |
|---|---|
| கமலம் பாடினாள். | முருகன் சென்றான். |
| கந்தன் வாசிக்கிறான். | மயில் ஆடுகிறது. |
| குதிரை ஓடுகிறது. | மீன் நீரில் நீந்தும். |


பிள்ளைகளே, மேலே வாக்கியங்களைப் படியுங்கள். அவ் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்கள் கமலம், கந்தன், முருகன், மயில், குதிரை, மீன் என்பன.

கமலம் என்ன செய்தாள்? மீன் என்ன செய்யும்? என்ற கேள்விகளைக் கேளுங்கள். என்ன விடை வருகிறது?

கமலம் பாடினாள், மீன் நீந்தும் என்பன அன்றோ? 'பாடினாள்' 'நீந்தும்' என்பன விடைகள். அவ்விடைகள் பெயர்ச் சொல்லின் தொழிலைக் குறிக்கின்றன. தொழிலுக்கு மற்றொரு பெயர் வினை என்பது. எனவே, பாடினாள், நீந்தும் என்பன வினைச் சொற்கள் எனப்படும். பெயரின் தொழிலைக் குறிப்பது வினைச் சொல் என்று அறியலாம் அன்றோ?

கீழ்வருவனவற்றிலுள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து எழுதுங்கள். பெயர்ச் சொற்களில் ஒருமை, பன்மை எண்ணையும் குறிப்பிடுங்கள்.

1. குதிரைகள் ஓடுகின்றன.
2. பறவைகள் பறந்தன.
3. காக்கை கரைந்தது.
4. நாய்கள் குரைக்கின்றன.
5. மான் புல்லைத் தின்றது.
6. மீன்கள் நீரில் நீந்துகின்றன.




## 20. உரையாடல்

### பருத்தி

**கந்தன் :**—வேலா, இன்று என்ன புதிய ஆடை உடுத்தி வந்திருக்கிருய்? ஏதேனும் விசேஷம் உண்டோ?

**வேலன் :**—அப்படி ஒன்றும் இல்லை. நேற்று என் மாமா வந்தார். அவர் எனக்கு இந்த வேட்டியும் அங்கவஸ்திரமும் வாங்கி வந்தார். அவற்றை அணிந்தேன்.

**கந்தன் :**—வேட்டியும் மேலாடையும் மிக அழகாயும் நயமாயும் இருக்கின்றன. ஆடைகள் எப்படி உண்டாகின்றன ?

**வேலன் :**—நல்லது கேள். ஆடைகள் பஞ்சு, கம்பளி, பட்டு என்பவற்ருல் செய்யப்படுகின்றன. பட்டினுல் செய்யப்படும் ஆடை விலை அதிகம். கம்பளி ஆடை குளிர் காலத்திற்குத்தான் உபயோகமாகும். பஞ்சு ஆடை எக்காலத்திலும் பயன் படும்; விலையும் குறைவு.

**கந்தன் :**—அப்படியா, சரி. பருத்தியாடையைப் பற்றி உனக்குத் தெரிந்தவற்றைச் சொல். எனக்குக் கேட்க விருப்பமாயிருக்கிறது.

**வேலன் :**—சொல்லுகிறேன், கேள். பஞ்சில் செடிப் பஞ்சு, மரப் பஞ்சு என்று இருவகை உண்டு. மரப் பஞ்சு இலவ மரத்தில் உண்டாகிறது.

**கந்தன் :**—ஆடைகள் எப்பஞ்சில் நெய்யப்படுகின்றன ?

**வேலன் :**—கறுப்பு மண் நிறைந்துள்ள பூமிக்குக் கரிசல் நிலம் என்று பெயர். கரிசல் நிலத்தில் பருத்திச் செடி நன்ருக வளரும். நம் நாட்டில் கோயம்புத்தூர், கர்நூல், கடப்பை, பல்லாரி, அனந்தபுரம், திருநெல்வேலி என்னும் ஜில்லாக்களிலும், பம்பாய் மாகாணத்திலும் பருத்தி ஏராளமாகப் பயிராகிறது. எகிப்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலான வெளிநாடுகளிலும் பருத்தி ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. நம் நாட்டுப் பருத்தியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிருேம். வெளிநாட்டிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்கிருேம். பஞ்சை வில்லால் அடித்து மிருதுவாக்குகிருர்கள்.

பின் அதனைத் தக்கிளி, இராட்டினம் என்பனவற்றைக் கொண்டு நூல் நூற்கிறார்கள். நூற்ற நூலை வீசனம் என்னும் கருவியால் சுற்றுவார்கள். பின், தறியிலிட்டு ஆடைகளாக நெய்கிறார்கள்.

இக்காலத்தில் எந்திரங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றால் நூல் நூற்கவும் ஆடைகள் நெய்யவும் எளிதாகிறது. மற்றும், ஆடைகளின் விலையும் குறைவாக உள்ளது.

**கந்தன்** :—வேலா, இன்று நான் உன்னால் பருத்தியைப் பற்றி நன்கு அறிந்தேன். நீ இன்னும் எத்தனை நாள் இங்கு இருப்பாய்? ஒவ்வொரு நாளும் எனக்கு ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லுகிறாயா?

**வேலன்** :—அவ்வாறே சொல்லுகிறேன். இன்னும் நான் இங்கு ஐந்து நாட்கள் இருப்பேன். நீ இன்று கேட்டறிந்ததை நாளைக்குப் 'பருத்தியும் பயனும்' தலைப்பு அமைத்து எழுதி வருக. வா, நேரமாயிற்று; போகலாம்.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| உடுத்தி | தோய்த்து | ஏராளமாய் |
| வேட்டி | ஒழுங்கான | இறக்குமதி |
| மேலாடை | வெடிப்பதற்கு | மாகாணம் |
| அலிவதை | ஏற்றுமதி | விஷயம் |

### சிறுவிடை வினாக்கள்

1. ஆடைகள் எவ்வெவற்றால் உண்டாகின்றன?
2. பஞ்சு எத்தனை வகைப்படும்?
3. பருத்தி விளையும் இடங்கள் எவை?

# 21. கிளிக்கண்ணிகள்

1. நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத்திறமு மின்றி
வஞ்சனை சொல்வாரடி — கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி.

2. கண்கள் இரண்டி ருந்தும்
காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்டமடி — கிளியே!
பேசிப் பயனென் னடி.

3. யந்திர சாலை என்பர்
எங்கள் துணிகள் என்பர்
மந்திரத் தாலே யெங்கும் — கிளியே!
மாங்கனி வீழ்வதுண்டோ!

4. உப்பென்றும் சீனி யென்றும்
உள் நாட்டுச் சேலை யென்றும்
செப்பித் திரிவாரடி — கிளியே!
செய்வது அறியாரடி.

5. மானம் சிறிதென்று எண்ணி
வாழ்வு பெரிதென்று எண்ணும்
ஈனர்க்கு உலகந்தனில் — கிளியே!
இருக்க நிலையுமுண்டோ?

6. பழைமை பழைமை என்று
பாவனை பேசல் அன்றிப்
பழைமை இருந்த நிலை — கிளியே!
பாமரர் ஏது அறிவார்?

7. சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி — கிளியே!
செம்மை மறந்தாரடி.

— சி. சுப்பிரமணிய பாரதியார்.

## இலக்கணம்

### காலம்

கமலம் பாடினாள். மாடு புல்லைத் தின்றது.
கந்தன் எழுதுகிறான். குதிரை ஓடுகிறது.
வேலன் வருவான். நாய் குரைக்கும்.

பிள்ளைகளே, மேலே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் படியுங்கள். அவைகளிலிருந்து பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் எடுத்து எழுதக் கூடும் அல்லவா? வினைச் சொற்களை மட்டும் கவனியுங்கள் :—

பாடினாள். தின்றது.
எழுதுகிறான். ஓடுகிறது.
வருவான். குரைக்கும்.

மேலே எடுத்து எழுதியுள்ள வினைச் சொற்களைப் படியுங்கள். 'பாடினாள்' என்றதும் நீங்கள் உணர்வது என்ன? 'எழுதுகிறான்' என்றதும் நீங்கள் உணர்வது என்ன? 'வருவான்' என்றதும் நீங்கள் உணர்வது என்ன? சிந்தித்துப் பாருங்கள்.

'பாடினாள்' என்றதும் காரியம் நடந்துவிட்டது என்று உங்களுக்குப் புலப்படுகிறது.

'எழுதுகிறான்' என்றதும் காரியம் நடந்துகொண்டிருப்பது என்று உங்களுக்கு விளங்கும்.


'வருவான்' என்றதும் காரியம் இனி நடக்கப் போகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

காரியம் நடந்ததை இறந்த காலம் என்பர்.

காரியம் நடப்பதை நிகழ் காலம் என்பர்.

காரியம் இனி நடக்கப் போவதை எதிர் காலம் என்பர்.

எனவே, வினைச் சொல்லிற்கு மூன்று காலங்கள் உண்டு. அவை இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன.



## 22. மனிதருள் மாணிக்கம்

பிள்ளைகளே, நாம் வசிக்கும் நாடு இந்தியா. இந்த நாட்டை முந்நூறு ஆண்டு காலம் இங்கிலாந்து தேசத்தினரான ஆங்கிலேயர் ஆண்டு வந்தனர்.

"ஆங்கிலேயர் ஆளுகையினின்றும் விடுபட வேண்டும்; நம் நாட்டை நாம் ஆளவேண்டும்" என்ற எண்ணம் நம் மக்களுக்கு உண்டாயிற்று. தேச பக்தர்களில் மிகச் சிறந்தவர் மகாத்மா காந்தி யடிகள். காந்தியடிகள் மிகவும் பாடுபட்டு நம் நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார்.

ஜவாஹர் 1889-ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் பிறந்த ஊர் அலகபாத். அவர் முன்னோர்கள் காஷ்மீரிலிருந்து அலகபாத்திற்கு வந்து குடியேறியவர்கள்

ஆவர். ஜவாஹரின் தந்தை பண்டித மோதிலால் நேரு; தாய் சொரூப ராணி அம்மையார். ஜவா ஹருக்கு விஜய லக்ஷ்மி, கிருஷ்ணு என இரு சகோ தரிகள் உண்டு.

அலகபாத்தில் மோதிலால் சிறந்த செல்வராக வாழ்ந்தார். அவர் நியாயவாதித் தொழில் புரிந்து வந்தார். அவர் வக்கீல் தொழிலில் நிறைந்த செல்வம் திரட்டினுர். அவர் அரசர் போல வாழ்ந்து வந்தார்.

ஜவாஹருக்கு ஆங்கிலத் தாதிகளும், ஆங்கிலேய ஆசிரியரும் ஏற்படுத்தப் பட்டிருந்தனர். ஜவாஹர் நன்ருய்க் கல்வி கற்று வந்தார். உயர்தரக் கல்விக்காக ஜவாஹர் இங்கிலாந்திற்குச் சென்ருர். இங்கிலாந்தில் ஜவாஹர் சிறப்பாகப் படித்துப் 'பாரிஸ்டர்' என்ற பட்டத்துடன் இந்தியாவிற்கு வந்தார்.

ஜவாஹருக்குத் தாய் நாட்டுப்பற்று உண்டா யிற்று. அவர் மகாத்மா காந்தியடிகளைக் கண்டார். காந்தியடிகளோடு சேர்ந்து ஜவாஹரும் தேசத்திற்குத் தொண்டு செய்ய முன் வந்தார். மோதிலாலும் நாட் டுக்குத் தொண்டு புரிய முன் வந்தார். அவர் தம் பெருஞ் செல்வத்தை நாட்டுத் தொண்டிற்குச் செல விட்டார். அலகாபாத்தில் மோதிலால் வசித்த வீடு, அரண்மனை போன்றது. அதற்கு 'ஆனந்த பவனம்' என்று பெயர். அதனை நாட்டுப் பணிக்காகப் பாடு படும் காங்கிரஸ் மகா சபைக்கு அளித்தார். அதற்கு இப்பொழுது 'சுயராஜ்ய பவனம்' என்று பெயர்.

தேசத் தொண்டில் இறங்கிய மோதிலாலும் ஜவா ஹரும் பல முறை சிறைக்குச் சென்றனர். பல துன் பங்களை அவர்கள் தாங்கி நின்றனர். ஜவாஹருக்கு மனைவியான கமலா நேரு அம்மையாரும் சிறை புகுந்

தார். ஜவாஹருக்கு ஒரே புதல்வி உண்டு. அவர் இந்திரா என்னும் பெயருடையவர்.

ஜவாஹர் தேசத் தொண்டில் ஈடு பட்டிருக்கும் பொழுது தந்தை, தாய், மனைவி என்பாரை இழந்தார். அவர் என்றும் தாய் நாட்டுத் தொண்டில் வழுவியது இல்லை. காந்தியடிகளின் ஆணைப்படி ஒழுகி வந்தார். காந்தியடிகளே ஜவாஹரை "மனிதருள் மாணிக்கம்" என்று போற்றிக் கூறினர்.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி இந்தியா சுதந்திரம் பெற்றது. ஜவாஹர் முதற் பேரமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்தியா வில் முடி சூடா மன்னராக ஜவாஹர் விளங்குகிறார்.

ஜவாஹர் சிறந்த அரசியல் அறிவு வாய்ந்தவர். அவர் சிறந்த தேச பக்தர்; தூய ஒழுக்கம் உடையவர். அஞ்சாமையும் உறுதியும் கொண்டவர். அவர் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர்; சிறந்த நூலாசிரியர். அவர் தம் சுயசரிதையை அழகாக ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அவர் வீரர். ஜவாஹர் நீடு வாழ்க; அவர் புகழ் ஓங்குக; இந்திய நாடு மேன்மை அடைக.

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலேயர் | சகோதரர்கள் | பணிக்காக |
| ஆளுகை | குடியேறினவர்கள் | நாட்டுத் தொண்டு |
| ஆட்சி | நியாய வழி | சிறை |
| சுதந்திரம் | வக்கீல் | புதல்வி |
| முன்னோர் | சவாரி | பேரமைச்சர் |
| அஞ்சாமை | ஏற்று | சுய சரிதை |

### சிறுவிடை வினாக்கள்

1. தேசப்பற்றில் சிறந்தவர் யார்?
2. பண்டித ஜவாஹர்லால் நேரு எந்த ஆண்டில் பிறந்தார்?

3. அவர் தாய், தந்தை, சகோதரிகள் யாவர்?
4. ஜவாஹர் கல்வி கற்றதுபற்றி மூன்று வரிகள் எழுது.
5. 'ஆனந்த பவனம்' என்று எதற்குப் பெயர்?
6. ஜவாஹரின் மனைவி, புதல்விகளின் பெயர்கள் என்ன?
7. தாய் நாட்டுத் தொண்டிலீடுபட்ட ஜவாஹர் செய்தவை யாவை?

## பயிற்சி—1

கீழ்வருவனவற்றில் ஒவ்வொரு வகைக்கும் ஐந்து பொருள்களை எழுது :—

1. தோட்டத்தில்
2. வகுப்பறையில்
3. காட்சிச் சாலையில்
4. ரயில்வே ஸ்டேஷனில்
5. தபாலாபீஸில்
6. அணியும் ஆபரணங்கள்
7. உடுத்தும் உடைகளில்
8. உடலின் உறுப்புக்களில்
9. போக்கு வரவுக்குரிய சாதனங்களில்

## பயிற்சி—2

உண் என்பது வினைச் சொல். இதனை உண்டேன், உண்கிறேன், உண்பேன் என்று மூன்று காலத்திலும் எழுதலாம் அல்லவா? பின்னும் பார்; படி :—

| | | |
|---|---|---|
| கண்டேன், | காண்கிறேன், | காண்பேன் |
| வந்தேன், | வருகிறேன், | வருவேன் |
| பேசினேன், | பேசுகிறேன், | பேசுவேன் |

மேலே காட்டியது போலக் கீழே கொடுத்துள்ள வினைச்சொற்களை மூன்று காலத்திலும் எழுது :—

படி, நில், கேள், பார், தூங்கு, எழுது, வாசி.



## 23. குகனும் பரதனும்

### முதற் களம்

**இடம் :**—கங்கைக்கரை (தென் கரை)

**காலம் :**—காலை வேளை

**பாத்திரங்கள் :**—குகன் - படைவீரர்கள்
(பார்த்துக் கூறுதல்)

**குகன் :**—வேட்டுவ வீரர்களே, அதோ அக் கரையில் பாருங்கள். பெருந் தூசிப் படலம் கிளம்பி இருக்கிறதே. (இரு வீரர்களைக் கூப்பிட்டு) அக் கரைக்குச் சென்று அத்தூசிப் படலம் எழும்புவதற் குக் காரணத்தை அறிந்து வாருங்கள்.

(இரு வீரர் படகில் ஏறி அக்கரை அடைந்து தூசிப் பட லத்தை அறிந்து வந்து)

**வீரர் :**—தலைவரே, அயோத்தி மன்னர் பெரும் படையுடன் வருகிறார்.

**குகன் :**—அயோத்தி மன்னரா? அவர் தாமே அண்ணனைக் காட்டிற்குத் துரத்திவிட்டு நாட்டைக்

கவர்ந்து கொண்டாரே. அவர் இங்கு வரக் காரணம் என்ன ?

வீரர் :—இராமரின் தம்பியோ ?

குகன் :—ஆம், இராமரின் தம்பிதான். பரதர் என்னும் பெயருடையவர். அவர் இங்கும் படையுடன் தொடர்ந்து வருதல் எனக்கு வியப்பை அளிக்கின்றது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

வீரர் :—அவர் இராமர்மீது போர் தொடுக்க வருகிறார்போல் காணப்படுகிறார்.

குகன் :—நாட்டையும் துறந்து வந்துவிட்டார். இராமரிடத்தில் படை ஏது ? நாட்டைக் கொடுத்த நம் தலைவரான இராமருக்குக் காட்டையும் கொடுக்கப் பரதருக்கு மனம் வரவில்லை. அதனால் அவர் படை யெடுத்து வந்திருக்கிறார்.

வீரர் :—ஆம், ஆம் ; அவ்வாறுதான் இருக்க வேண்டும். நாம் என்ன செய்யலாம் ?

குகன் :—வீரர்களே, இப்பரதர் இக் கங்கையை எவ்வாறு நம் உதவியின்றிக் கடப்பார் ?

வீரர் :—ஆம், நாம் அவரைக் கடக்க விடு வோமோ ? அவர் தாம் கடக்க முடியுமோ ?

குகன் :—கடக்கவிடுவதா ? கடக்கவிட்டால் நம் அன்புதான் என்ன ? பரதரின் சேனைகளைக் கண்டு அஞ்சுபவர்களோ நம் வீரர் ? இராமர் என்னைப் பார்த்து, “ நான் நின் தோழன் ” என்று சொல்லிய சொல் சத்தியமொழி அல்லவா ? நாட்டைக் கொடுத்த நம் தலைவருக்குக் காட்டைக் கொடுக்கவும் மனமில் லாமல் படைகொண்டு வரும் பரதரை நாம் எளிதில் விட்டுவிடுவோமா ? அவ்வாறு விட்டுவிட்டால் நம் நட்பு என்ன பயன் ? நாம் வீரர் என்று சொல்லிக் கொள்ளலாமோ ? நாம் பரதரோடு போர் புரிந்து

நாட்டைப் பிடுங்கி இராமருக்குக் கொடுத்தால் வேட்டுவ குலத்திற்கே பெரும் புகழ் உண்டாகும் அல்லவா ?

**வீரர் :**—ஆம், ஆம். அவ்வாறே செய்வோம். பரதரைத் தடுப்போம்; எதிர்ப்போம்.

**குகன் :**—வீரர்களே, படகுகளைத் தயாரியுங்கள்; நான் முதலில் அக்கரை செல்கிறேன். அதோ பரதன் படையும் நெருங்கி வருகிறது.

(குகன் படகேறி வடகரையை அடைதல்)

## இரண்டாம் களம்

**இடம் :**—கங்கையின் கரை (வட கரை)

**காலம் :**—காலை

**பாத்திரங்கள் :**—பரதன், சுமந்திரன், சேனைகள்.

**பரதன் :**—சுமந்திரரே, அதோ ஆற்றங்கரையில் நம் வருகையைப் பார்த்தபடியே ஒருவன் நிற்கிறான். அவன் தோற்றத்தால் பெருவீரனைப் போலத் தோன்றுகிறான். அவனைச் சூழ்ந்து சில வீரர்களும் நின்றனர். அதோ கங்கையின் தென்கரையில் பல படகுகள் காணப்படுகின்றன. அவற்றில் வீரர்கள் உள்ளனரே.

**சுமந்திரன் :**—ஆம், அதோ எதிரில் கம்பீரமாகத் தோன்றும் வீரன் வேட்டுவ குலத் தலைவன். குகன் என்ற பெயரை உடையவன். மலைபோன்ற பருத்த தோள்களை உடையவன். இராமனிடத்தில் அளவு கடந்த அன்புடையவன். கருமையான அழகிய வடிவம் உடையவன். அவன் உம்மைக் காணும் பொருட்டே எதிரில் நின்று கொண்டிருக்கிறான் போலும்!

**பரதன்** :—ஆனால் அத்தகையவனை நாமே முதலில் சென்று காண்போம்; வருக.

(சுமந்திரனும் பரதனும் வருகிறார்கள். அவர்கள் நெருங்க நெருங்கக் குகன் மனத்தில் எண்ணுகிறான்.)

**குகன்** :—அதோ இருவர் வருகின்றனர். ஆ! அவன் தான் பரதன் போலும்! என்ன? இரண்டு கைகளையும் குவித்துக்கொண்டு அல்லவோ வருகிறான்! இராமன் சென்ற திசை நோக்கித் தொழுகிறான் போலும்! (நெருங்கி வர) என்ன! அரசர் கோலத்தைக் காணேமே! இராமனைப் போல மரவுரி அன்றோ தரித்துக் கொண்டிருக்கிறான்!

[பரதன் வர, குகன் எதிரில் செல்ல இருவரும் ஒருவரை ஒருவர் வணங்குகின்றனர்.]

**குகன்** —ஐயா, தாங்கள் யார்? எதன் பொருட்டு வந்தீர்கள்? படைகள் வரக் காரணம் என்ன?

**பரதன்**—என் தந்தை தசரதர் என் தாய்க்கு இருவரத்தை அளித்தனர். என் தாய் ஒரு வரத்தால் என் அண்ணனை இராமனைக் காட்டிற்கு அனுப்பி, மற்றோர் வரத்தால் எனக்கு இராஜ்யத்தை வாங்கி அளித்தாள். அது முறையன்று என்று எனக்குத் தோன்றியது. இராமனை அழைத்துச் செல்ல வந்தேன். நான் கங்கையைக் கடக்கவேண்டும். அதற்கு உதவி செய்யவேண்டும்.

**குகன்** :—அப்படியா! நான் தங்களைத் தவறாக வல்லவோ நினைத்தேன்? தாய் மொழிப்படி தந்தை அளித்த நாட்டைத் தீமையானது என்று நீக்கினீர். அண்ணன் காடு சென்றதால் உண்டான துக்க முகத்தோடு அவரை அழைத்துச் செல்ல வந்திருக்கிறீர். உம் அருங்குணத்தை நோக்கும் பொழுது ஆயிரம்

இராமர்களிருப்பினும் உமக்கு ஒப்பாகார். வாருங்கள், என்னலான உதவியைச் செய்கிறேன்.

(எல்லோரும் கங்கைக் கரையை அடைகிருர்கள். குகன் கட்டளைப்படி படகுகள் கொண்டுவரப்பட்டன. எல்லோரும் படகுகளில் ஏறி அக்கரை சேர்ந்தனர்.)

### அரும் பதங்கள்

| | | |
|---|---|---|
| தூசிப்படலம் | தொடுக்க | வேட்டுவ குலம் |
| எழும்புவது | தலைவர் | தோற்றம் |
| காரணம் | கடப்பார் | வருவதை |
| துரத்தி | தோழன் | முறையன்று |
| வியப்பு | தயாரி | ஒப்பாகார் |

### சிறுவிடை வினுக்கள்

1. குகன் யார்?
2. குகன் பரதன் படையைப் பார்த்து என்ன கூறினன்?
3. இராமன் குகனை என்ன என்று கூறிப் பெருமைப் படுத்தினன்?
4. பரதன் வந்த காரணம் என்ன?
5. பரதன் நிலையைக் குகன் கண்டு வியக்கக் காரணம் என்ன?
6. குகனைப் பற்றிச் சுமந்திரன் யாது கூறுகிறன்?
7. குகன் தன் படை வீரர்களுக்குப் பரதன் படையைக் கண்டு கூறிய வீரமொழிகள் எவை?

### பயிற்சி—1

காரணம், தலைவர், தோழன், தயாரி, முறையன்று—இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் எழுது.

### பயிற்சி—2

கடல், ஆறு, குளம், மலை, சோலை—இவற்றில் ஒன்றைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

# செய்யுட் பகுதி

## 1. ஆத்திசூடி

1. வஞ்சகம் பேசேல்.
2. இளமையில் கல்.
3. கூடிப் பிரியேல்.
4. கோதாட்டு ஒழி.
5. கெடுப்பது ஒழி.
6. கேள்வி முயல்.
7. செய்வன திருந்தச் செய்.
8. சேரிடம் அறிந்து சேர்.
9. சோம்பித் திரியேல்.
10. தீவினை அகற்று.
11. தெய்வம் இகழேல்.
12. தேசத்தோடு ஒத்துவாழ்.
13. நன்மை கடைப்பிடி.
14. நோய்க்கு இடங்கொடேல்.
15. பழிப்பன பகரேல்.
16. பெரியோரைத் துணைக்கொள்.
17. மூர்க்கரோடு இணங்கேல்.
18. மேன் மக்கள் சொற்கேள்.
19. வித்தை விரும்பு.
20. உத்தமனாய் இரு.

—ஔவையார்

குறிப்புரை

1. வஞ்சகம்—மனத்தில் ஒன்றும் வாயில் ஒன்றும் பேசுதல்.
3. கூடி—சிநேகித்து
4. கோது ஆட்டி—குற்றமான ஆட்களை
7. திருந்த—செம்மையாக
9. சோம்பி—சோம்பேறியாக
10. தீவினை—கெட்ட செயல்களை
15. பழிப்பன—பிறர் பழிக்கும்படியான சொற்களை
16. மூர்க்கர்—முரட்டுக் குணமுடையோர்

## 2. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
6. கிட்டாதாயின் வெட்டென மற.
7. கீழோர் ஆயினும் தாழ உரை.
8. கைப் பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
9. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
10. சூதும் வாதும் வேதனை செய்யும்.
11. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
12. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
13. தாயிற் சிறந்து ஒரு கோயிலும் இல்லை.
14. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
15. தொழுதுாண் சுவையின் உழுதூண் இனிது.
16. நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.
17. நாடெங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை.

—ஔவையார்

### குறிப்புரை

1. அன்னை - தாய்; பிதா - தந்தை; முன் அறி - முதலில் அறியப்படும்.
2. ஆலயம் - கோயில்; சாலவும் - மிகவும்.
3. ஈயார் - கொடாதவர்; தேட்டை - தேடிய செல்வத்தை.
4. வேருடன் - அடியோடு.
5. எண் - கணக்கு; எழுத்து - இலக்கண இலக்கியம்.
7. தாழ - பணிவாக.
8. கைப் பொருள் - கையிலுள்ள செல்வம்.
9. சீர் - பெருமை.
10. வாது - வம்பு வழக்கு; சூது - சூதாட்டம்.
11. தேம்பி - வருந்தி.
14. திரைகடல் - அலைகளை உடைய கடல்; திரவியம்-செல்வம்.
15. தொழுது ஊண் - பிறரை வணங்கிச் சம்பாதித்து உண்ணும் உணவு.
16. இணக்கம் - சிநேகம்; அல்லல் - துன்பம்; படுத்தும்-உண்டாக்கும்.

## 8. வெற்றி வேற்கை

1. எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக்கு அழகு கசடுஅற மொழிதல்.
3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
4. உழவர்க்கு அழகு உழுதுஊண் விரும்பல்.
5. அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்.
6. கற்கை நன்றே கற்கை நன்றே
   பிச்சை புகினும் கற்கை நன்றே.
7. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
   நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே.
8. எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
   அக்குடியிற் கற்றோரை வருக என்பர்.
9. ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்.
10. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
11. இல்லோர் இரப்பது இயல்பே இயல்பே.
12. வாழிய நலனே, வாழிய நலனே.

—அதிவீரராமபாண்டியர்

### குறிப்புரை

1. இறைவன் - கடவுள்.
2. கசடுஅற - குற்றம் நீங்க.
3. செழுங்கிளை - நிறைந்த சுற்றத்தார்.
4. ஊண் - சாப்பாடு.
5. அடங்கல் - அடக்கமாயிருத்தல்.
6. கற்கை - படித்தல்;
   பிச்சை புகினும் - பிச்சை எடுத்தாயினும்.
7. கல்லா - படியாத; குலநலம் - குலத்தின் பெருமை முதலியன; பதர் - அரிசி இல்லாத நெல்.
8. ஞானி - அறிவுடையோன்.
10. உடைமை - செல்வம்; வறுமை - தரித்திரம்; ஒருவழி - ஒரே இடத்தில்.
11. இல்லோர் - பொருள் இல்லாத தரித்திரர்; இரப்பது - யாசிப்பது.
12. வாழிய நலனே - நன்றாக வாழ்க.